


# தினபூமி

thinaboomi.com








**அமெரிக்காவில் ஒரே நாளில் 1,500 பேருக்கு தண்டனை குறைப்பு: அதிபர் ஜோ பைடன் நடவடிக்கை**

...2-ம் பக்கம்

**பார்லி. தாக்கப்பட்ட தினம்: உயிர்நீத்தவர்களுக்கு பிரதமர் மோடி அஞ்சலி**

...3-ம் பக்கம்

**இந்தியா-ஆஸ்திரேலியா அணிகள் மோதும் 3-வது டெஸ்ட் போட்டி: பிரிஸ்பேனில் இன்று தொடக்கம்**

...7-ம் பக்கம்





● சென்னை எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் அதிகனமழைபெய்து வருவதையொட்டி, மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, வருவாய் ஆணையர் ராஜேஷ் லக்கானி, முதன்மைச்செயலாளர் பெ.அமுதா ஆகியோரிடமும், காணொலிக்காட்சி வாயிலாக 3 மாவட்ட கலெக்டர்களிடமும் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

### தென் மாவட்டங்களில் மழை பாதிப்பு பெரிய அளவில் இல்லை:

# பாதிப்புகளை சமாளிக்க தமிழ்நாடு அரசு தயார்

## ஆய்வுக்கு பிறகு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி

சென்னை, டிச. 14-

**தூத்துக்குடி, தென்காசி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், பெரிய அளவுக்கு மழை பெய்துள்ளது. ஆனால், பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டதாக இதுவரை செய்திகள் இல்லை. எது வந்தாலும், அதை சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது, என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

**பெரிய அளவுக்கு...**

சென்னை எழிலகத்தில் உள்ள அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் தென் மாவட்டங்களில் பெய்து வரும் கனமழை குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த முதல்வர், "தூத்துக்குடி, தென்காசி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், பெரிய அளவுக்கு மழை பெய்துள்ளது. அதுதொடர்பாக, ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தி, அதை மேற்பார்வையிடுவதற்காக, சென்னையில் இருந்து மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் அனுப்பிவைக்கப்பட்டனர். அதுதொடர்பான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**செய்திகள் இல்லை...**

தென் மாவட்டங்களில் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டதாக இதுவரை செய்திகள் இல்லை. எது வந்தாலும், அதை சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. தென்காசி பகுதியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரனும், திருநெல்வேலிக்கு அமைச்சர் கே.என். நேரு நேற்று பார்வையிட்டார். பின்னர், திருச்சியில் மழை பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், அங்கு வந்துள்ளார். மறுபடியும் அவரை திருநெல்வேலிக்கு செல்லுமாறு கூறியிருக்கிறேன்.

**பெரிய அழுத்தமாக...**

மத்திய அரசு தமிழகத்துக்கு பேரிடர் நிதி கொடுக்க வேண்டியதை வலியுறுத்தி ஊடகங்கள் தொடர்ந்து எழுதினால் அதுவே மத்திய அரசுக்கு பெரிய அழுத்தமாக இருக்கும். மத்திய அரசு ஏற்கெனவே கொடுத்துள்ள நிதி போதுமானது அல்ல. மழையால் நீர் வரத்து அதிகரித்துள்ள பகுதிகளில் ஏரிகள் திறந்துவிடும் பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. கரையோரப்பகுதி மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு, பாதுகாப்பாக சில இடங்களில் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தேவையான இடங்களில் நிவாரண முகாம்கள் அமைக்கப்படும். ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், ரூ.2000 நிவாரணம் வழங்கும் பணிகள் ஏறக்குறைய முடிந்துவிட்டது.

**கடுமையாக எதிர்ப்போம்...**

மத்திய அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை இன்டியா கூட்டணி கட்சிகள் ஒன்று சேர்ந்து கடுமையாக எதிர்ப்போம். எங்களால் முடிந்தவரை அனைவரும் ஒன்று சேர்ந்து அந்த மசோதாவை கடுமையாக எதிர்ப்போம். மசோதாவுக்கு எதிராக இண்டியா கூட்டணி சார்பில் போராட்டம் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

### துணை முதல்வர் உதயநிதியின் கோரிக்கை ஏற்பு:

# உலக செஸ் சாம்பியன் குகேஷுக்கு ரூ.5 கோடி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, டிச. 14-

**சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் நடப்பு சாம்பியன் சீனாவை சேர்ந்த டிங் லிரெனை வீழ்த்தி தமிழக வீரர் குகேஷ் சாம்பியன் பட்டம் வென்றார். இதனால் இவருக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தமிழக முதல்வர் உள்ளிட்ட பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.**

இந்நிலையில் தமிழகத்திற்கு பெருமை சேர்த்த உலக செஸ் சாம்பியன் குகேஷுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ. 5 கோடி பரிசுத்தொகையாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்கு சிறப்பான முக்கியத்துவத்தை அளித்து வருகின்றது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து, பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் தமிழ்நாட்டில் அனைவரும் பாராட்டும் வண்ணம் நடத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் தமிழ்நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு மிகச்சிறப்பாக திட்டமிட்டு, நடத்தப்பட்டன. அதில் பங்குபெற்று வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து வீரர்களையும் முதல்வர் நேரில் அழைத்துப் பாராட்டி, பரிசுகளை வழங்கினார்.

தற்போது சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த டி. குகேஷ் நேற்று முன்தினம் நடப்பு சாம்பியனான சீனாவின் டிங் லிரென் வென்று சாதனை படைத்துள்ளார்.

மிக இளம் வயதிலேயே உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்று உலக செஸ் சாம்பியனாக வாகை சூடி சாதனை படைத்து, இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த டி. குகேஷை முன்னதாக தனது எக்ஸ் தளத்தில் பாராட்டி வாழ்த்தி முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் பதிவிட்டிருந்ததோடு, தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ள குகேஷுக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கிட வேண்டுமென்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முதலமைச்சருக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனையேற்று, டி.குகேஷை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அவருக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசின் கோரிக்கை ஏற்பு:

# பெரியாறு அணை பராமரிப்பு பணிகளுக்கு கேரளா அனுமதி

தேனி, டிச. 14-

**தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று முல்லைப் பெரியாறு அணை பராமரிப்புப் பணிகளுக்காக கட்டுமானப் பொருட்களை எடுத்து செல்ல கேரள அரசின் வனத்துறை அனுமதி வழங்கியுள்ளது என்று தேனி மாவட்ட கலெக்டர் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள, வாகனங்கள் மூலம் கட்டுமானப் பொருள்களை எடுத்து செல்ல கேரள வனத்துறையிடம் முறையாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் குடிநீர், பாசன ஆதாரமாகத் திகழும் முல்லைப் பெரியாறு அணை தமிழக-கேரள எல்லையில் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையின் சார்பில், முல்லைப் பெரியாறு அணைப்பகுதியில் ஆண்டுதோறும் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படுவது வழக்கம். இந்நிலையில் பொதுப்பணித்துறையின் சார்பில் கடந்த டிசம்பர் 4-ம் தேதி, தேனியிலிருந்து 2 தனியார் லாரிகளில் தளவாடப் பொருள்களை ஏற்றிக் கொண்டு, இடுக்கி மாவட்டம், குமுளி வட்டம் வல்லக்கடவு வழியாக முல்லைப் பெரியாறு அணைக்குக் கொண்டு சென்றனர்.

சோதனைச் சாவடியில் முல்லைப் பெரியாறு அணைக்குப் பொருள்கள் எடுத்துச் செல்ல கேரள வனத்துறையினரிடம் உரிய அனுமதி பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தேனி மாவட்ட கலெக்டர் மூலம் தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளருக்கு (நீர்வளத்துறை) தகவல் தெரிவிக்கப்பட்டு, கேரள அரசின் மூலம் வல்லக்கடவு சோதனைச் சாவடி மற்றும் தேக்கடி படகு இறங்கு தளம் வழியாக முல்லைப் பெரியாறு அணைப் பகுதிக்குக் கட்டுமான பொருள்களைக் கொண்டு செல்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அந்தமான் கடல் பகுதியில் புதிய காற்றழுத்தம்:

# வரும் 16-ம் தேதி முதல் தமிழகத்தில் மீண்டும் மழை

புதுடெல்லி, டிச. 14-

**அந்தமான் கடல் பகுதியில் உருவாகும் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்தில் வரும் 16-ம் தேதி முதல் மீண்டும் பரவலாக மழை பெய்யும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.**

வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி நெல்லை, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட தென்தமிழக மாவட்டங்களில் நேற்று அதிகாலை முதல் பல்வேறு இடங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் புகுந்து குடியிருப்புகளை சூழ்ந்துள்ளது. கே.டி.சி. நகர், கீழநத்தம், திருநெல்வேலி டவுன் பகுதிகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் புகுந்துள்ளது. தாமிரபரணி மற்றும் அதன் கிளை ஆறுகளின் கரையோரம் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர் மழையால் தென்காசி மாவட்டத்தில் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஐந்தருவியில் அனைத்து கிளைகளிலும் தண்ணீர் அபாய அளவை தாண்டி ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அருவிக்கரைகளில் போலீசார் தடுப்புகள் அமைத்து கண்காணித்து வருகின்றனர்.

தென்காசியில் குளம் ஒன்றில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக செங்கோட்டை - கேரளா சாலையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இடைவிடாத மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

(கடைசி பக்கம் பார்க்க)

### ரசிகை உயிரிழந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்ட

# நடிகர் அல்லு அர்ஜூனுக்கு இடைக்கால ஜாமீன்

## தெலங்கானா உயர் நீதிமன்றம் உத்தரவு

ஐதராபாத், டிச. 14-

**கூட்ட நெரிசலில் சிக்கி ரசிகை உயிரிழந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்ட நடிகர் அல்லு அர்ஜூனுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கி தெலங்கானா ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.**

புஷ்பா 2 பட நடிகர் அல்லு அர்ஜூன். இவர் கடந்த 4ம் தேதி இரவு ஐதராபாத்தில் உள்ள சந்தியா தியேட்டருக்கு இரவு 10.30 மணிக்கு திரையிடப்பட்ட புஷ்பா 2 படத்தை பார்க்க சென்றார். அவருடம் நடிகை ராஷ்மிகா மந்தனா உள்பட பலரும் சந்தியா தியேட்டருக்கு வந்தனர். இதனால், தியேட்டரில் ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. அப்போது, குடும்பத்துடன் புஷ்பா 2 படம் பார்க்க வந்த ரேவதி (வயது 35) என்ற பெண், அவரது மகன் ஸ்ரீதேஜா (வயது 9) ஆகிய இருவரும் கூட்ட நெரிசலில் சிக்கி நிலை தடுமாறி



கிழே விழுந்தனர்.

அப்போது, ரசிகர்கள் பலர் இருவர் மீதும் ஏறி மிதித்தனர். இதனால், இருவரும் மூச்சுப் பேச்சின்றி சுயநினைவு இழந்தனர். இதையடுத்து, இருவரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சிறுவன் ஸ்ரீதேஜாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் அவரது தாயாரான ரேவதி ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தைய நிலையில் ரேவதி உயிரிழந்த சம்பவத்தில் நடிகர் அல்லு அர்ஜூன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதேவேளை, தன் மீது பதியப்பட்ட வழக்கை ரத்து செய்யக்கோரி நடிகர் அல்லு அர்ஜூன் தெலுங்கானா ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இதனிடையே, ரேவதி உயிரிழப்பு சம்பவத்தில் நடிகர் அல்லு அர்ஜூனை போலீசார் நேற்று கைது செய்தனர். சிக்கட்பள்ளி போலீஸ் நிலையத்திற்கு அழைத்து செய்யப்பட்ட அல்லு அர்ஜூன் பின்னர் நம்பள்ளி கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அதேவேளை, தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கோரி அல்லு அர்ஜூனா தெலுங்கானா ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அல்லு அர்ஜூனை 14 நாட்கள் நீதிமன்ற காவலில் அடைக்க நம்பள்ளி கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் கைது செய்யப்பட்ட அல்லு அர்ஜூனுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கி தெலுங்கானா கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழா:

# மலை உச்சியில் மகா தீபம் ஏற்றம்

தி.மலை, டிச. 14-

**தி.மலை கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு நேற்று மாலை மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.**

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 4-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. தினமும் காலையில் விநாயகர், சந்திரசேகரர் வீதி உலாவும், இரவில் பஞ்சமூர்த்திகள் வீதி உலாவும் நடைபெற்றது. திருவிழாவின் சிகர விழாவான மகா தீப திருவிழா நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

முன்னதாக அதிகாலை 4 மணிக்கு கோவிலில் பரணி தீபம் ஏற்றப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். மாலை 6 மணிக்கு கோவிலுக்கு பின்புறம் உள்ள 2,668 அடி உயரமுள்ள மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது. மகா தீபத்தை சுமார் 40 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இதையொட்டி மாவட்ட நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது. கோவிலில் நடைபெறும் விழாவினை நேரடியாக வெளிப்பகுதியில் உள்ள பக்தர்களுக்கு ஒளிபரப்ப 20 எல்.இ.டி. திரைகள் அமைக்கப்பட்டிருந்தன. பல்வேறு துறைகள் சார்பில் பல முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தீபத்திருவிழாவிற்கு திருவண்ணாமலை நகரம் தயார் நிலையில் உள்ளது.


இந்த நிலையில், தீபத் திருவிழாவையொட்டி திருவண்ணாமலை மாடவீதிகளில் நேற்று அதிகாலையில் இருந்தே லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடு, வெளிமாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர். கிரிவலப்பாதையில் ஆங்காங்கே பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மகா தீபத்தை காண பெற்றோர்களுடன் வரும் குழந்தைகள் கூட்டத்தில் காணாமல் போவதை தவிர்க்க அவர்கள் கையில், பெயர், பெற்றோர் பெயர், மொபைல் எண் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய டேக் கட்டப்பட்டிருந்தது. மேலும் கிரிவலப்பாதையில் பக்தர்கள் வருகையை கருத்தில் கொண்டு பாதுகாப்பு பணியில் 16,000 போலீசார் ஈடுபட்டிருந்தனர்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 843.16 | 219.60 |
| பாயின்ட் 82,133.12 | பாயின்ட் 24,768.30 |



**தங்கம்**
1 சவரன் ₹57,840
1 கிராம் ₹7,230



**வெள்ளி**
1 கிலோ ₹101,000
1 கிராம் ₹101.00

**டாலர்** ₹84.80

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

# அமெரிக்காவில் ஒரே நாளில் 1,500 பேருக்கு தண்டனை குறைப்பு

## அதிபர் ஜோ பைடன் நடவடிக்கை

**வாஷிங்டன், டிச. 14-**

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அடுத்த மாதம் பதவி விலக உள்ள நிலையில், ஒரே நாளில் சுமார் 1500 பேரின் தண்டனைகளை குறைத்துள்ளார். 19 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறார். இது தொடர்பாக வெள்ளை மாளிகை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி, கொரோனா பரவல் அதிகரித்தபோது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1,500 தண்டனை கைதிகளின் தண்டனை குறைக்கப்படுகிறது. வன்முறையற்ற குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட 39 நபர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது. இதன்மூலம் அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் ஒரே நாளில் அதிக நபர்களுக்கு கருணை காட்டப்பட்டுள்ளது.



ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி தண்டனை கைதிகள் திருந்தி வாழ இரண்டாவது வாய்ப்புகளை வழங்க முடியும். செய்த தவறுகளுக்கு வருந்தி தம் தெரிவித்து, சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதற்காக விருப்பம் தெரிவித்தவர்களுக்கு மன்னிப்புகளும் தண்டனைக் குறைப்புகளும் வழங்கப்படுவதாக ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

பைடனின் கருணை நடவடிக்கையை மனித உரிமைக் குழுக்கள், ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பத்தினர் பாராட்டியுள்ளனர். நீதி அமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

# டெல்லியில் மீண்டும் பள்ளிகளுக்கு இமெயிலில் வெடிகுண்டு மிரட்டல்

**டெல்லி, டிச. 14-**

டெல்லியில் உள்ள மூன்று பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டது. மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து பள்ளிகளில் சோதனை நடத்தப்பட்டது.

கடந்த டிசம்பர் 9 ஆம் தேதியில் இருந்து கிட்டத்தட்ட 44 பள்ளிகளுக்கு இதேபோல் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. வெடிகுண்டு மிரட்டலைத் தொடர்ந்து நடத்தப்பட்ட சோதனையில் அவை வெறும் புரளிதான் என்று தெரியவந்தது. நேற்றைய வெடிகுண்டு மிரட்டல் குறித்து பேசிய தீயணைப்புத் துறை அதிகாரி, "பசிம் விகாரில் உள்ள பட்நகர் சர்வதேச பள்ளி, ஸ்ரீனிவாஸ் பூரியில் உள்ள கேம்பிரிட்ஸ் பள்ளி மற்றும் டிபிஎஸ் அமர் காலனியில் உள்ள பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது." என தெரிவித்தார். வெடிகுண்டு மிரட்டலைத் தொடர்ந்து தீயணைப்பினர், போலீசார் மற்றும் வெடிகுண்டு கண்டறியும் குழுவினர் மோப்ப நாய் படைகளுடன் பள்ளிகளுக்கு வந்து சோதனை நடத்தினர்.

## பார்லி.யில் தொடர் அமளி:

# ஜாக்கி வாசுதேவ் கோரிக்கை

**புதுடெல்லி, டிச. 14-**

பாராளுமன்றத்தில் தொடர் அமளி நிலவி வரும் நிலையில் சமூக வலைதளத்தில் சத்குரு ஜக்கி வாசுதேவ் கருத்து தெரிவித்துள்ளார். அதில் செல்வத்தை உருவாக்குபவர்கள் மீது சர்ச்சை கூடாது என்று தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் கூட்டத்தொடர் தொடங்கிய நாளில் இருந்து அதானி விவகாரம் தொடர்பாக விவாதிக்க அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் அவை நடவடிக்கைகள் முழுமையாக நடைபெறவில்லை. அடிக்கடி ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சோரோஸ்-சோனியா காந்தி விவகாரத்தை பா.ஜ.க கையில் எடுத்துள்ளது. இது தொடர்பாக விவாதம் நடத்த பா.ஜ.க. கோரிக்கை வைக்கிறது. இதனால் மக்களவை மற்றும் மாநிலங்களவை செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து தனது சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள மதகுரு ஜக்கி வாசுதேவ், உலகிற்கு ஜனநாயகத்தின் கலங்கரை விளக்கமாக இருக்க நாம் விரும்பும் போது, இந்திய பாராளுமன்றத்தில் இடையூறுகள் ஏற்படுவதைக் காண்பது வருத்தமளிக்கிறது. இந்தியாவின் செல்வத்தை உருவாக்குபவர்கள், வேலை வாய்ப்பு வழங்குபவர்களை அரசியல் சர்ச்சைகளுக்கு ஆளாக்கக்கூடாது. முரண்பாடுகள் இருந்தால், அதை சட்டத்தின் கட்டமைப்புக்கு உட்பட்டு உரிய முறையில் அதற்கு தீர்வு காண வேண்டும் ஆனால் அவர்களை அரசியல் கால்பந்தாக பந்தாடக்கூடாது. மிக முக்கியமாக, இந்திய வணிகங்கள் செழிக்க வேண்டும். பாரதம் பவ்ய பாரதமாக மாறுவதற்கான ஒரே வழி இதுதான்என்று தெரிவித்துள்ளார்.

# இம்ரான் கான், அவரது மனைவி மீது புதிய ஊழல் வழக்குப்பதிவு

**இஸ்லமாபாத், டிச. 14-**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷாரா பிபி மீது புதிய ஊழல் குற்றச்சாட்டின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் இருந்த போது, உலக நாடுகளின் தலைவர்கள் கொடுத்த பரிசு பொருட்களை அரசு கருவூலத்தில் ஒப்படைக்காமல், தனிப்பட்ட முறையில் முறைகேடாக விற்றது உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் உள்ளன. அரசு கருவூலத்திற்கு வரும் பரிசுப் பொருட்களை தோஷகானா துறை பேணி காத்து வரும் நிலையில், இந்த முறைகேட்டில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பிபி ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இஸ்லமாபாத் கோர்ட்டில் நடந்து வந்த இந்த வழக்கில், இருவருக்கும் தலா 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால், இந்த தண்டனையை எதிர்த்த தொடரப்பட்ட மேல்முறையீட்டில், தண்டனையை நிறுத்தி வைத்து கோர்ட் உத்தரவிட்டது. அதேவேளையில், அரசு ரகசியங்களை கசிய விட்ட வழக்கிலும் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், அரசு கருவூலத்தில் இருந்த விலை உயர்ந்த ஆபரணங்களை குறைந்த விலைக்கு வாங்கியதாக இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பிபி மீது புதிய முறைகேடு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கிற்காக சிறையில் இருந்த இருந்த இம்ரான் கானும், ஜாமினில் இருக்கும் புஷ்ரா பிபியும் கோர்ட்டில் ஆஜரானினர். அப்போது, இருவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்தனர். அதே வேளையில், இந்த வழக்கில் டிச.,18ம் தேதி சாட்சியங்களை பதிவு செய்ய கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

# ஏ.ஐ. தொழில்நுட்பம் நம்மை அடிமையாக்கும்

## யுவால் நோவா ஹராரி எச்சரிக்கை

**மும்பை, டிச. 14-**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் நம் கட்டுப்பாட்டில் இருந்து விலகி நம்மை அதன் அடிமையாக்கும் என வரலாற்று துறை பேசாரியரும், எழுத்தாளருமான யுவால் நோவா ஹராரி தெரிவித்துள்ளார்.

'நெக்சஸ்: கற்காலம் முதல் செயற்கை நுண்ணறிவு வரையிலான தகவல் பரிமாற்ற அமைப்பு முறைகளின் ஒரு சுருக்கமான வரலாறு' என்ற அவரது லேட்டஸ்ட் புத்தகம் தகவல்கள் குறித்து பேசுகிறது. மும்பையில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று ஏஐ குறித்து தனது பார்வையை யுவால் நோவா ஹராரி முன்வைத்தார்.

"ஏஐ நமது கட்டுப்பாட்டில் இருந்து நம்மை அதன் அடிமையாக்கும் வாய்ப்பு உள்ளது. ஏனெனில், ஏஐ என்பது கருவி அல்ல. அதுவொரு ஏஜென்ட். ஒரு புத்தகமோ அல்லது அச்சகமோ நம் கட்டுப்பாட்டில் இருந்து தப்பாது. அச்சகத்தால் புதிய புத்தகத்தை உருவாக்க முடியாது. ஆனால், ஏஐ அதை செய்யும். டெக்ஸ்ட், இமேஜ் மற்றும் வீடியோ உள்ளிட்டவற்றை ஏஐ உருவாக்கும் திறன் கொண்டுள்ளது. சுயமாக கற்று, அதற்கான மாற்றத்துக்கு செல்லும் தன்மையை ஏஐ கொண்டுள்ளது. அதனால் தான் அதை கட்டுப்படுத்துவது கடினம் என சொல்கிறேன்.

2016-ல் கோ விளையாட்டின் உலக சாம்பியன் லீ செடோலை செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட 'ஆல்பா கோ' வீழ்த்தியது. அதுவரை உலகம் கோ விளையாட்டை விளையாட பயன்படுத்திய யுக்திகளில் இருந்து ஆல்பா கோ முற்றிலும் வேறுபட்டது. அது வெறும் விளையாட்டு தான். இருந்தாலும் அதில் அது செய்த மாற்றத்தை நாம் கவனிக்க வேண்டும். அதனால் தான் அது குறித்த எச்சரிக்கையை தருகிறேன்." என தெரிவித்துள்ளார்.

# சட்டமன்ற நாட்களை குறைக்கும் விவகாரம்:

# தி.மு.க. அரசுக்கு ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

**சென்னை, டிச. 14-**

சட்டமன்ற நாட்களை குறைக்கும் விவகாரத்தில் தமிழக அரசுக்கு ஓ.பி.எஸ். வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை எண் 376-ல், கழக ஆட்சியில் சட்டமன்றம் குறைந்தது 100 நாட்களுக்கு மேல் முறையாக நடக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு முற்றிலும் முரணான சூழ்நிலை தமிழ்நாட்டில் நிலவுகிறது. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2021-ம் ஆண்டில் 29 நாட்களும், 2022-ம் ஆண்டில் 33 நாட்களும், 2023-ம் ஆண்டில் 29 நாட்களும், 2024-ம் ஆண்டில் 18 நாட்களும் சட்டமன்றம் நடைபெற்றுள்ளது. அதாவது 1,365 நாட்களில் வெறும் 109 நாட்கள் மட்டுமே சட்டமன்றம் கூடியுள்ளது. அதுவும், குறிப்பாக குளிர்கால கூட்டத்தொடரை இரண்டே நாளில் முடித்து சாதனை படைத்துள்ள அரசு தி.மு.க. அரசு. இந்த வாக்குறுதியில் கூட தி.மு.க. இரட்டை வேடத்தை கடைபிடிப்பது ஆட்சி அலங்கோலத்தின் உச்சகட்டம்.

ஒவ்வொரு சர்க்கார் அலுவலகமும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாக ஆக வேண்டும். அப்பொழுது தான் ஜனநாயகம் வளரும் என்றார் பேரறிஞர் அண்ணா. போறிஞர் அண்ணா வழியில் ஆட்சி நடத்துவதாக சொல்லிக் கொண்டு, ஜனநாயகத்தின் மையமாக விளங்கும் சட்டமன்றத்திலேயே ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் செயல் நடைபெற்றுக் கொண்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. மக்களின் மனக்குமுறலை மக்கள் பிரதிநிதிகள் மூலம் ஜனநாயக ரீதியில் வலியுறுத்தும் இடமாக விளங்கும் சட்டமன்றத்தை இனி வருங்காலங்களிலாவது அதிக நாட்கள் கூட்டவும்; ஆட்சியின் அவலங்களை, மக்களின் குறைகளை சுட்டிக்காட்டும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்பினை வழங்கவும் நடவடிக்கை எடுத்து, ஜனநாயகம் தழைத்தோங்குவதை உறுதி செய்ய வேண்டுமென்று முதல்-அமைச்சரை அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சி தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சிறையில் இருந்து தப்பிய சீன பெண் கைது

**வாஷிங்டன், டிச. 14-**

அமெரிக்காவில் சிறையில் இருந்து தப்பி ஓடிய சீன இளம்பெண் போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள ஒரு தேவாலயத்தில் கடந்த 2021-ம் ஆண்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனையடுத்து துப்பாக்கிச்சூடு நடத்தியதாக ஜியாவோகின் யான் (வயது 30) என்ற சீன இளம்பெண்ணை போலீசார் கைது செய்தனர்.

இதுதொடர்பான வழக்கில் அவருக்கு 9 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அதன்பேரில் டான்பரி நகரில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் ஜியாவோகின் திடீரென சிறையில் இருந்து தப்பி ஓடினார்.

இதனையடுத்து போலீசார் அவரை தேடும் பணி முடுக்கி விடப்பட்டது. சுமார் 7 மணி நேர தேடுதலுக்கு பிறகு அந்த இளம்பெண்ணை போலீசார் மீண்டும் கைது செய்தனர்.

# அசாமில் போதைப்பொருள் பறிமுதல்- 5 பேர் கைது

**கவுகாத்தி,டிச. 14-**

அசாமில் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரத்தில் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

அசாமின் ஸ்ரீபூமி மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து அப்பகுதியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அண்டை மாநிலத்தில் இருந்து வாகனத்தில் கொண்டு வரப்பட்ட 50 ஆயிரம் யாபா என்ற போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. மேலும் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட 5 பேரை போலீசார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து அம்மாநில முதல்-மந்திரி ஹிமந்தா பிஸ்வா சர்மா தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டு போலீசாரை பாராட்டியுள்ளார்.

## தமிழகத்தில் மருத்துவமனைகளில்

# பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்ய முத்தரசன் கோரிக்கை

**சென்னை, டிச. 14-**

தமிழகத்தில் மருத்துவமனைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

திண்டுக்கல் மாநகரின் திருச்சி சாலையில் இருந்த தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் (12.12.2024) ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி, ஒரு குழந்தை உட்பட ஏழு பேர் மரணமடைந்தனர் என்ற செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. மின் சாதனம் வெடித்து சிதறியதால் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்த 30க்கும் மேற்பட்ட நோயாளர்கள் அரசு மருத்துவமனையில் சேர்த்து, சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலர் உயிருக்கு போராடும் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு மாடி கொண்ட மருத்துவமனை கட்டிடம் விபத்து கால நெருக்கடிகளை எதிர் கொள்ளும் வசதியும், விபத்து கால தடுப்பு சாதனங்கள் எளிதில் கையாளும் வசதியும் இருந்ததா என்பதை விசாரிக்க வேண்டும். விபத்தில் மரணமடைந்த குடும்பங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது குடும்பங்களுக்கு, மருத்துவமனை நிர்வாகமும், அரசும் உரிய இழப்பீடு வழங்கி உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மே.வங்க முன்னாள் அமைச்சருக்கு ஜாமீன்


**டெல்லி, டிச. 14-**

பண பரிவர்த்தனை வழக்கில் கைதான பார்த்தா சாட்டர்ஜிக்கு ஜாமீன் வழங்கப்பட்டது.

மேற்குவங்க முன்னாள் கல்வி அமைச்சர் பார்த்தா சாட்டர்ஜிக்கு சுப்ரீம் கோர்ட் ஜாமீன் வழங்கியது. பள்ளிகளில் பணி நியமனம் செய்ய லஞ்சம் வாங்கியது தொடர்பான சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் ஜாமீன் வழங்கப்பட்டது. அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கில் 2 ஆண்டுக்கும் மேலாக பார்த்தா சட்டர்ஜி சிறையில் உள்ள நிலையில் ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

**கண் தானம் செய்வீர்**

**14-12-2024**



**இன்றைய ராசி பலன்கள்**

**மேஷம்** – எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாமதப்படும். கண்ணில் பிரச்சனை எழலாம். மாணவர்களின் கவனச் சிதறல்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக கல்வியில் தடைகள் ஏற்படலாம்.

**ரிஷபம்** – வியாபாரத்தில் பணம் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். புதிய யுக்திகளை கையாண்டு வாடிக்கையாளரை கவர்வர். வாக்கு வன்மையால் வளம் பெருகும். பயணங்கள் பயன் தரும்.

**மிதுனம்** -- வரவு 8 அணா, செலவு 10 அணா என வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். உறவுகள் மீது தேவையற்ற பகை உணர்ச்சி ஏற்படும். சினம் தணிந்தால் சிக்கல்கள் தீரும். பாவையர் மூலம் பணவிரயம் ஏற்படும்.

**கடகம்** – பணவரவு அதிகரித்து பரவசப்படும் நாள். மனம் விரும்பிய மங்கையின் அருகாமை மகிழ்ச்சி அளிக்கும். தம்பதிகள் பிரிவால் ஏற்பட்ட பிளவு சரியாக பின்னர் இணைந்தே மகிழ்வர்.

**சிம்மம்** –எல்லாக் காரியங்களும் அனுகூலமாகும். அரசு ஆதரவு, அரசு உத்தியோக வாய்ப்பு ஆகியவை கிடைக்கும். தேகதிடம், தைரியம் எல்லாம் ஓங்கும். முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும்.

**கன்னி** -- தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். ஆடம்பர சாதனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வெளியூர்ப் பயணங்கள் வெற்றிகரமாக அமையும். வாழ்க்கையில் புதிய பல முன்னேற்றங்கள் உருவாகும்.

**துலாம்** – நியாயமாக நடக்க வேண்டிய நாள். கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் எழலாம். கடமை தவறாது நடந்து அதிகாரிகளிடம் பணிவாகவும் நடந்தால் பணியில் சாதகமான சூழல் உருவாகும்.

**விருச்சிகம்** – பாக்கிய விருத்தி ஏற்படும். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். செல்வ நிலை சீராக உயரும். அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வினை எதிர்பார்க்கலாம்.

**தனுசு** – அனைத்து வளங்களும் சேரும். தனவரவு கூடும். புதிய பந்தங்கள், திருமண உறவுகள் ஏற்படும். தனக்கென அழகிய வீடு அமையும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைவேறும்.

**மகரம்** – – மாணவர்களுக்கு கல்வியில் மிகுந்த அக்கறை தேவை. மற்றவர்கள் குறை கூறாத அளவுக்கு நல்லபடியாக நடந்து கொள்வது நல்லது. துன்பம் வந்தாலும் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**கும்பம்** – தாயின் உடல் நிலையில் சிறப்பு கவனம் தேவை. முயற்சிகளில் ஏற்படக்கூடிய தடை, தாமதங்கள் கண்டு துவண்டு விடாமல், தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

**மீனம்** – அனைத்து வகையிலும் சகோதரர்கள் முழு ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள்.

## அமைச்சர் செந்தில் பாலாஜி வழக்கு:

# சுப்ரீம் கோர்ட் மீண்டும் கேள்வி

**புதுடில்லி, டிச. 14-**

செந்தில் பாலாஜி தமிழகத்தின் அமைச்சராக எப்படி தொடர்கிறார் என்று சுப்ரீம் கோர்ட் மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட செந்தில் பாலாஜி, 471 நாள் சிறைவாசத்திற்குப் பிறகு ஜாமினில் வெளியே வந்தார். பிறகு, மறுநாளே அவர் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அமைச்சராக அவர் பொறுப்பேற்றதை எதிர்த்து சென்னையைச் சேர்ந்த வித்யாகுமார் என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அமைச்சர் பதவியில் இல்லை எனக் காரணம் காட்டி ஜாமினை பெற்ற அவர், மறுநாளே மீண்டும் அமைச்சராக பதவியேற்றுள்ளதாகவும், கீழமை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்ற வருவதால், விசாரணை பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். எனவே, அவரது ஜாமீனை ரத்து செய்யக்கோரி மனுதாரர் வலியுறுத்தியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஜாமீன் பெற்ற மறுநாளே அமைச்சராகி உள்ளீர்கள். இதன்மூலம், இந்த வழக்கில் தொடர்புள்ள சாட்சிகளுக்கு அழுத்தம் உண்டாகாதா? வழக்கின் விசாரணை பாதிக்கப்பட்டால், அமலாக்கத்துறை கோர்ட்டை நாடுவார்கள், எனக் கூறி விசாரணையை ஒத்தி வைத்தனர்.

இந்த நிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, செந்தில் பாலாஜி அமைச்சராக எப்படி தொடருகிறார்? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். மேலும் இது தொடர்பாக உரிய பதிலை வரும் 18-ந் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். இந்த வழக்கில் அமலாக்கத்துறை தங்களின் வாதங்களை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய சுப்ரீம் கோர்ட் அனுமதியளித்துள்ளது. அமைச்சர் பதவி விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட் தொடர்ந்து கேள்வி எழுப்பி வருவதால், செந்தில் பாலாஜிக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

# பஞ்சாப் விவசாயி பிரதமர் மோடிக்கு பரபரப்பு கடிதம்

**சண்டிகர், டிச. 14-**

எனது மரணத்துக்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்று சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் பஞ்சாப் விவசாயி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பயிர்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை உள்ளிட்ட 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உத்தர பிரதேச மற்றும் அரியானாவின் டெல்லி எல்லைகளில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். டெல்லி நோக்கி செல்ல முயன்ற விவசாயிகள் மீது போலீஸ் கண்ணீர் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இருப்பினும் மத்திய அரசு செவி சாய்க்கும் வரை போராட்டத்தை விவசாயிகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில எல்லையான கானௌரியில் பஞ்சாப் விவசாயி தலைவர் ஜக்ஜித் சிங் தலேவால், நவம்பர் 26 முதல் நடத்தும் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் நேற்று முன்தினம் 17வது நாளை எட்டியது. அவர் தற்போது மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், தாம் நாட்டின் சாதாரண விவசாயி என்றும், பிப்ரவரி 13-ம் தேதி முதல் நடைபெற்று வரும் விவசாயிகள் போராட்டத்துக்கு மத்தியில் கனத்த இதயத்துடன் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை (எம்எஸ்பி) சட்டப்பூர்வ உத்தரவாதம் உள்ளிட்ட 13 கோரிக்கைகளை அரசு ஏற்க வேண்டும். இந்த போராட்டத்தில் நான் இறந்தால் மத்திய அரசு தான் அதற்கு பொறுப்பு. போராட்டங்கள் நடக்கும் இடத்தில் போலீசார் ஏதாவது செய்தால் அந்த பொறுப்பும் அரசின் மீதுதான் விழும் என்று எழுதியுள்ளார்.

# தங்கம் விலை குறைவு

**சென்னை,டிச. 14-**

தங்கம் விலை கிராமுக்கு ரூ.55 குறைந்து விற்பனையானது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து தங்கம் ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்ட நிலையில், கடந்த அக்டோபர் மாதம் 30-ந் தேதி ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம் பெற்றது. அதனை தொடர்ந்து தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது. கடந்த 3 நாட்களுக்கு முன் தங்கம் விலை சவரனுக்கு ரூ.640 உயர்ந்த நிலையில் நேற்று முன்தினம் மாற்றமின்றி விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில் தங்கம் விலை நேற்று குறைந்துவிற்பனையானது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.440 குறைந்து, ரூ.57,840-க்கு விற்பனையானது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.55 குறைந்து, ஒரு கிராம் ரூ.7,230-க்கு விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.3 குறைந்து ஒரு கிராம் ரூ.101-க்கு நேற்று விற்பனையானது.

### தமிழ்நாடு கூட்டுறவு வங்கிக்கு மத்திய அரசின் விருதுகள்:

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார் தமிழ்நாடு அமைச்சர்

**சென்னை, டிச. 14-**
தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு 5 விருதுகள் வழங்கப்பட்டது. அதனை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து அமைச்சர் பெரியகருப்பன் உள்ளிட்டோர் வாழ்த்து பெற்றனர்.

மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் , புதுதில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட 5விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார். மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையம் , மாநில மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை எளிதாக்குவதற்கும், குறிப்பாக கூட்டுறவு கடன்களை மேம்படுத்துவதற்கும் கடந்த 19.5.1964 அன்று நிறுவப்பட்டது. இந்த இணையத்தில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில கூட்டுறவு வங்கிகளும் உறுப்பினர்களாக உள்ளன.

இந்த தேசிய இணையம் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு அமைப்புகளின் கீழ் சிறப்பாக செயல்படும், தலைமை வங்கி, மாவட்ட மத்திய வங்கி, கூட்டுறவு கடன் சங்கங்கள் என செயல்படும் மூன்றடுக்கு கூட்டுறவு வங்கிகள் மற்றும் தலைமை வங்கியின் கீழ் செயல்படும் தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்கள் என இரண்டடுக்கு முறையில் செயல்படும் கூட்டுறவு வங்கிகளுக்கு விருதுகளை வழங்கி வருகிறது. இந்த அமைப்பு 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 60 ஆண்டுகளைக் கடந்து வைரவிழா கொண்டாடும் தருணத்தில் விருது வழங்கும் விழாவினை 26.11.2023 அன்று புதுதில்லியில் நடத்தியது. 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் சிறப்பாக செயல்பட்ட வங்கிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இந்த வைர விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், விருதினை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா வழங்கிட, தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட 5 விருதுகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெற்றுக் கொண்டார். இந்நிலையில் நேற்று தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட 5 விருதுகளை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

### டெல்லி சட்டசபை தேர்தல்:

# முதல் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது காங்கிரஸ் கட்சி

**புதுடெல்லி, டிச. 14-**
டெல்லி சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடும் 21 பேர் கொண்ட முதல் வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது.

தலைநகர் டெல்லியில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கான தேதி எப்போது வேண்டுமானாலும் அறிவிக்கப்படலாம். மூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடிக்க ஆம் ஆத்மி கட்சி தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தற்போது அதற்கான பணிகளை தொடங்கிவிட்டார். மொத்தமுள்ள 70 தொகுதிகளில் 31 தொகுதிகளுக்கு ஏற்கனவே வேட்பாளர்களை அறிவித்துவிட்டார்.

டெல்லி தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றால், 18 வயது நிரம்பிய அனைத்து பெண்களுக்கும் ஒவ்வொரு மாதமும் தலா 2,100 ரூபாய் வழங்கப்படும் என தெரிவித்தார். டெல்லி சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி இல்லை என ஆம் ஆத்மி தெரிவித்துள்ளது.இந்நிலையில், காங்கிரஸ் கட்சி தனது முதல் கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் முன்னாள் எம்பியான சந்தீப் தீக்‌ஷித் புதுடெல்லி தொகுதியில் போட்டியிடுகிறார். ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் புது டெல்லி தொகுதியில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பார்லி. தாக்கப்பட்டதன் 23-ம் ஆண்டு தினம்:

# உயிர்நீத்தவர்களுக்கு பிரதமர் மோடி அஞ்சலி



**புதுடெல்லி, டிச. 14-**
கடந்த 2001-ம் ஆண்டு இதே நாளில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் பாராளுமன்றத்தின் மீது நடத்திய தாக்குதலில் உயிர்நீத்தவர்களுக்கு குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, பிரதமர் மோடி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

பாராளுமன்றம் தாக்கப்பட்டதன் 23ம் ஆண்டை முன்னிட்டு இந்த தாக்குதலில் உயிர்தியாகம் செய்தவர்களின் புகைப்படங்கள் பாராளுமன்ற வளாகத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. இந்த படங்களுக்கு குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாஜக தலைவர் ஜே.பி. நட்டா, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, மத்திய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்த தாக்குதலை தனது எக்ஸ் பக்கத்தில் நினைவு கூர்ந்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, “2001 பாராளுமன்ற தாக்குதலில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அவர்களின் தியாகம் என்றென்றும் நம் தேசத்தை ஊக்குவிக்கும். அவர்களின் துணிச்சலுக்கும் அர்ப்பணிப்புக்கும் நாங்கள் என்றென்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, “2001ஆம் ஆண்டு பாராளுமன்றத் தாக்குதலின் போது கடமையில் ஈடுபட்டு உயிர் தியாகம் செய்த வீரத் தியாகிகளுக்கு எனது இதயப்பூர்வமான அஞ்சலியை செலுத்துகிறேன். அவர்களின் துணிவும் தியாகமும் என்றும் நம் நினைவுகளில் நிலைத்திருக்கும். நமது ஜனநாயகத்தின் புனிதத்தைப் பாதுகாப்பதில் அவர்கள் காட்டிய அர்ப்பணிப்புக்கு நாங்கள் என்றென்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.” என்று தெரிவித்துள்ளார்.

2001ல் நடந்த பாராளுமன்ற தாக்குதலை பாகிஸ்தானின் லஷ்கர் இ தொய்பா மற்றும் ஜெய்ஷ் இ முகமது ஆகிய பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்த 5 பயங்கரவாதிகள் நடத்தினர். அவர்களுக்கு எதிராக இந்திய பாதுகாப்புப் படையினர் துணிச்சலுடன் சண்டையிட்டனர். இந்த மோதலில் 5 பயங்கரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேநேரத்தில், இந்திய பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 8 பேர் உயிரிழந்தனர். தோட்டக்காரர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

### திண்டுக்கல்லில் மருத்துவமனை

# தீ விபத்தில் 7 பேர் உயிரிழப்பு: எடப்பாடி பழனிசாமி இரங்கல்

**சென்னை, டிச. 14-**
திண்டுக்கல் தனியார் மருத்துவமனையில் நிகழ்ந்த தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது, திண்டுக்கல்லில் தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 வயது குழந்தை உட்பட 7 பேர் உயிரிழந்த செய்தி மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது. உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும், வருத்தங்களையும் தெரிவித்து கொள்கிறேன். தீக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ள அனைவருக்கும் உரிய மருத்துவ சிகிச்சை அளித்து, அவர்கள் பூரண உடல்நலத்துடன் வீடு திரும்புவதை உறுதிசெய்யுமாறு திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரிசர்வ் வங்கிக்கு இ-மெயிலில் மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்

**மும்பை, டிச. 14-**
மும்பையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கி தலைமையகத்துக்கு ஒரே மாதத்தில் 2-வது முறையாக வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. மதியம் ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு ரஷிய மொழியில் எழுதப்பட்ட வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. இதுதொடர்பாக மும்பை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக நவம்பர் 16-ம் தேதி, ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர் சேவை எண்ணுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது. மறு பக்கம் பேசியவர் தன்னை லஷ்கர்-இ-தொய்பாவின் தலைமை நிர்வாக அதிகாரி (சி இஓ) என்று கூறினார். மேலும் அவர் மிரட்டல் விடுப்பதற்கு முன் தொலைபேசியில் ஒரு பாடலைப் பாடியதாகக் கூறப்படுகிறது. 2008-ம் ஆண்டு நவம்பர் 26-ம் தேதி மும்பையில் சத்திரபதி சிவாஜி ரெயில் நிலையம், தாஜ் ஓட்டல் உள்ளிட்ட இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் 175 பேர் வரை உயிரிழந்தனர், 300 பேர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது குறிப்பிடத்தக்கது.

# வருடத்துக்கு 82 ஆயிரம் குழந்தைகள் இறப்பா? தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, டிச. 14-**
தமிழகத்தில் வருடத்துக்கு 82 ஆயிரம் குழந்தைகள் இறப்பதாக கூறுவது முற்றிலும் பொய்யான தகவல் என்று விளக்கமளித்துள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக தமிழ்நாட்டில் வருடத்துக்கு 10 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன எனவும் அதில் 82 ஆயிரம் குழந்தைகள் இறந்துவிடுகிறார்கள் என்றும் ஒருவர் கூறும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

இதனை தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் மறுத்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்தில் வருடத்துக்கு 82 ஆயிரம் குழந்தைகள் இறப்பதாக கூறுவது முற்றிலும் பொய்யான தகவல். தமிழகத்தில் குழந்தை இறப்பு விகிதம் பெருமளவு குறைந்திருக்கிறது. பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் 1,000 குழந்தை பிறப்புகளுக்கு 2021-22-ம் ஆண்டு 10.4 சதவீதம் ஆகவும், 2022-23-ம் ஆண்டு 10.2 சதவீதம் எனவும், 2023-24-ம் ஆண்டு 8.27 சதவீதம் என்றும் உள்ளது. நடப்பாண்டு பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 4 லட்சத்து 89 ஆயிரத்து 838 ஆக உள்ளது.

இதில் 3 ஆயிரத்து 838 குழந்தைகள் இறந்துள்ளது. இது இறப்பு விகிதத்தில் 7.8 சதவீதம் ஆக பதிவாகியிருக்கிறது என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிறுபான்மையினரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

### வங்கதேசத்திற்கு இந்தியா வலியுறுத்தல்

**புதுடெல்லி, டிச. 14-**
வங்கதேசம் தனது சொந்த நலனுக்காக, சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பு என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது, அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை எனும் கொள்கையை இந்தியா கடைப்பிடிப்பதைப் போல், இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுப்பதை அண்டை நாடுகள் கடைப்பிடிக்கின்றனவா என காங்கிரஸ் எம்பி மணிஷ் திவாரி கேள்வி எழுப்பினார். அதோடு, பல்வேறு துணைக் கேள்விகளையும் அவர் எழுப்பினார்.

இந்த கேள்விகளுக்கு பதில் அளித்த வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், “அண்டை நாடுகளுக்கு இந்தியா முன்னுரிமை கொடுப்பதைப் போல் அண்டை நாடுகள் இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுக்கின்றனவா என்ற கேள்விக்கு என்னுடைய பதில் ஆம் என்பதே. மாலத்தீவுகள் விஷயத்தைப் பொறுத்தவரை இரு தரப்பு உறவுகள் வலுவாக உள்ளன. இந்தியா பல தீவுகளை இணைக்கும் சாலை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அண்டை நாடுகள் ஒன்றையொன்று சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

இந்திய - சீன எல்லையில் உள்ள 26 ரோந்துப் புள்ளிகளும் இந்திய வீரர்களால் அணுகக் கூடியதாக உள்ளதா என மணீஷ் திவாரி கேட்கிறார். இந்திய-சீன எல்லை தொடர்பாக நான் ஏற்கனவே அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். டெப்சாங் மற்றும் டெம்சோக் தொடர்பான ஒப்பந்தங்கள் கடைசியாக நடந்தவை. இந்தியப் படைகள் டெப்சாங்கில் உள்ள அனைத்து ரோந்துப் புள்ளிகளுக்கும், கிழக்கு எல்லைக்கும் செல்லும்.

பாகிஸ்தான் உடனான உறவைப் பொறுத்தவரை, அந்நாட்டுடன் நல்ல உறவை வைத்திருக்க இந்தியா விரும்புகிறது. ஆனால் மற்ற அண்டை நாடுகளைப் போலவே, நாமும் பயங்கரவாதம் இல்லாத உறவுகளை வைத்திருக்க விரும்புகிறோம். கடந்த கால நடத்தையை மாற்றிக்கொண்டு விட்டார்களா என்பதை பாகிஸ்தான் தரப்பு தான் காட்ட வேண்டும் என்பதை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம். வங்கதேசத்தைப் பொறுத்தவரை அந்நாட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்ட நல்ல வரலாறு நமக்கு உள்ளது. இரு தரப்புக்கும் பயன்தரக் கூடிய, நிலையான உறவுக்குள் செல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது. வங்கதேசத்தில் சிறுபான்மையினர் நடத்தப்படும் விதம் கவலையளிக்கிறது. இந்தியாவின் இந்த கவலை, வங்கதேச உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். இந்திய வெளியுறவு செயலாளர் டாக்காவிற்கு பயணம் மேற்கொண்டார். வங்கதேசம் தனது சொந்த நலனுக்காக, அதன் சிறுபான்மையினரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பு.” என்று தெரிவித்தார்.

# எம்.ஜி.ஆர். திரைப்படக்கல்லூரியில் மூன்று புதிய படப்பிடிப்பு தளங்கள்

### அமைச்சர் சாமிநாதன் துவக்கி வைத்தார்

**சென்னை, டிச. 14-**
எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரியில் அதிநவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய 3 புதிய படப்பிடிப்புத் தளங்களை அமைச்சர் சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இன்று தமிழ்த் திரையுலகில் சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தின் 74-வது பிறந்த நாள் காணக் கொண்டிருக்கின்ற அவருக்கும் என்னுடைய பிறந்தநாள் வாழ்த்துகளையும், அரசின் சார்பிலும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியத் திரைப்படத் திறனாய்வு கழகத்தின் மூலம் சிறிய முயற்சியாக 21 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கினார்கள். இவ்விழாவிற்கு 2008-ஆம் ஆண்டு அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் முதல் முதலாக நிதியுதவி வழங்கி, இந்த விழா நடைபெறுவதற்கு ஒரு தூண்டுகோலாக இருந்தார்கள்.

உலகின் சிறந்த திரைப்படங்களையும், திரைப்பட இயக்குனர்களையும் கொண்டாடும் நிகழ்வாக மாறி, தற்போது இந்தியாவின் முன்னணி திரைப்பட விழாக்களில் ஒன்றாக மாறியுள்ளது உண்மையில் மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்விழாவில் வரலாற்றிலேயே முதன் முறையாகவும், இந்திய திரைப்பட விழாக்களில் இதுவரை இல்லாத எண்ணிக்கையில் 177 திரைப்படங்களையும், 50-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட திரைப்படங்களுடன், விருது பெற்ற 40 திரைப்படங்களும் திரையிட உள்ளதற்கும் செய்தி கிடைப்பதற்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

அதேபோல, எம்.ஜி.ஆர். திரைப்படக்கல்லூரியில் சுமார் ரூபாய் 5 கோடி மதிப்பில் குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்பு தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அதிநவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய 3 புதிய படப்பிடிப்புத் தளங்கள் சுமார் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் துவங்க இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை சர்வதேச திரைப்பட விழாவை தென்கிழக்கு ஆசியாவின் முன்னனித் திரைப்பட விழாக்களில் ஒன்றாக உயர்த்தவும், புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் திரை கலைஞர்களையும், உலகெங்கிலும் உள்ள திரைப்பட ஆர்வலர்களையும், திரைப்பட இயக்குனர்களையும், தொழில்நுட்ப வல்லுநர்களையும் ஈர்க்கும் வகையில் இந்நிகழ்வை மாற்ற முயற்சிக்கும் விழா குழுவினருக்கு எனது பாராட்டுகளை தெரிவித்து, சிறப்பாக இந்த சர்வதேச திரைப்பட விழா நடைபெறுவதற்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில் இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் தலைவர் சிவன் கண்ணன், இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் பொதுச் செயலாளரும், சென்னை சர்வதேச திரைப்பட விழா இயக்குநருமான ஏ.வி.எம்.சண்முகம். துணைத் தலைவர் ஆனந்த் ரங்கசாமி, திரைப்பட நடிகைகள் பூர்ணிமா, குஷ்பு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### உலக செஸ் சாம்பியன் பட்டம்:

# குகேஷ்-க்கு சந்திரபாபு நாயுடு தெரிவித்த வாழ்த்தால் சர்ச்சை

**ஐதராபாத், டிச. 14-**
உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர் குகேஷ்-க்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்த வாழ்த்தால் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உலக செஸ் சாம்பியன் ஷிப்பில் சீனாவின் லிரெனை வீழ்த்தி தமிழகத்தின் குகேஷ் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி புதிய சரித்திரம் படைத்தார். 18 வயதான குகேஷ், செஸ் உலகின் 18-வது சாம்பியனாக சாதனை பட்டியலில் இணைந்துள்ளார். மேலும் குறைந்த வயதில் சாம்பியன் பட்டத்தை உச்சிமுகர்ந்த வீரர் என்ற மகத்தான சாதனைக்கும் சொந்தக்காரர் ஆகியுள்ளார். இந்திய தரப்பில் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை ருசித்த 2-வது வீரர் ஆவார். உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற தமிழக வீரர் குகேஷிற்கு அரசியல் தலைவர்கள், பிரபலங்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் உலக செஸ் சாம்பியனான டி.குகேஷுக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், எங்கள் சொந்த தெலுங்கு பையன், இந்திய கிராண்ட்மாஸ்டர் டி குகேஷ், சிங்கப்பூரில் 18 வயதில் உலகின் இளைய செஸ் சாம்பியனாகி வரலாற்றை எழுதுவதற்கு மனமார்ந்த வாழ்த்துகள். அவரது சாதனையை ஒட்டுமொத்த தேசமும் கொண்டாடுகிறது. வரும் காலங்களில் இன்னும் பல வெற்றிகளையும் பாராட்டுகளையும் பெற வாழ்த்துகிறேன்! என்று தெரிவித்துள்ளார்.ஆந்திர முதல்வரின் இத்தகைய பதிவு நெட்டிசன்கள் அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளனர். ஆந்திர முதல்வரின் இந்த பதிவுக்கு நெட்டிசன்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். சென்னையில் பிறந்தவரான குகேஷ்-ஐ ‘தெலுங்கு பையன்’ என்று குறிப்பிடுவது சரியா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். நாட்டிற்கு பெருமை தேடிக் கொடுத்த இளம் சாம்பியனை அனைவரும் உரிமை கொண்டாடலாம், ஆனால் மொழி வாரியாக பிரிப்பது வீண் சர்ச்சைகளையே உண்டாக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

### அரசியலமைப்பை கபளீகரம் செய்ய முயற்சி:

# காங். மீது ராஜ்நாத் சிங் மறைமுக தாக்கு

**டெல்லி, டிச. 14-**
குறிப்பிட்ட கட்சி’ அரசியலமைப்பை கபளீகரம் செய்ய முயல்கிறது என்று பார்லி. மக்களவையில் காங்கிரஸ் கட்சி மீது ராஜ்நாத் சிங் மறைமுகமாக தாக்கி பேசினார்.

இந்திய பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 25-ந்தேதி தொடங்கியது. வருகிற 20-ந் தேதி வரை நடைபெற இருக்கிறது. இந்நிலையில் இன்றைய மக்களவை கூட்டத்தில் அரசியலைப்பு மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. அதன் மீது மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது:-

அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும் பணியை ஒரு குறிப்பிட்ட கட்சி அபகரித்து கபளீகரம் செய்யும் முயற்சியில் எப்போதும் இருந்து வருகிறது. இன்று நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன், நமது அரசியலமைப்பு ஒரு தனிக் கட்சியின் பரிசு அல்ல என்று காங்கிரசை மறைமுகமாக விமர்சித்தார்

இந்திய அரசியல் சாசனம் இந்திய மக்களால் உருவாக்கப்பட்டது, இந்தியாவில் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான எங்கள் அரசாங்கம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ள தர்மத்தின் படி செயல்படுகிறது. அரசியலமைப்பு முற்போக்கானது, அனைவரையும் உள்ளடக்கியது, மாற்றத்திற்கு உட்பட்டது. நமது நாட்டில் , ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் நாட்டின் பிரதமராகவும், நாட்டின் ஜனாதிபதியாகவும் ஆக முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

### நடிகர் அல்லு அர்ஜுன் கைது:

# ஜெகன் மோகன் கண்டனம்

**ஐதராபாத், டிச. 14-**
அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்டதற்கு ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நடிகர் அல்லு அர்ஜுன் கடந்த 4ம் தேதி இரவு ஐதராபாத்தில் உள்ள சந்தியா தியேட்டருக்கு திரையிடப்பட்ட புஷ்பா 2 படத்தை பார்க்க சென்றார். அவரை காண தியேட்டரில் ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது.

அப்போது, குடும்பத்துடன் புஷ்பா 2 படம் பார்க்க வந்த ரேவதி (வயது 35) என்ற பெண் கூட்ட நெரிசலில் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தைய நிலையில் ரேவதி உயிரிழந்த சம்பவத்தில் நடிகர் அல்லு அர்ஜுன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மேலும், இந்த சம்பவத்தில் நடிகர் அல்லு அர்ஜுனை போலீசார் நேற்று கைது செய்தனர்.

அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்டதற்கு அவரது ரசிகர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியதுடன், அரசியல் தலைவர்களும் இந்த கைது நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.


இந்த நிலையில், நடிகர் அல்லு அர்ஜுனின் கைதுக்கு ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக் அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

“தியேட்டரில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் இறந்த பெண்ணின் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு ஈடு செய்ய முடியாதது. திரையரங்கில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் பெண் உயிரிழந்த சம்பவத்திற்கு அவர் ஆறுதல் தெரிவித்துவிட்டார்.

மேலும் இவ்விவகாரத்தில் பொறுப்புடன் செயல்பட்டார். இருப்பினும் இச்சம்பவத்திற்கு அவரை நேரடியாக பொறுப்பாளியாக்குவது எந்த விதத்தில் நியாயம்? கூட்ட நெரிசலில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், அர்ஜுன் மீது கிரிமினல் வழக்குகளைப் பதிவு செய்து அவரைக் கைது செய்வது ஏற்றுக்கொள்ள முடியாதது. அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்டதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்


### தலைவர்கள் சொல்வதை படிங்க....



அதிக விலை கொண்ட ஆவின் கிரீன் மேஜிக் பிளஸ் பாலை அறிமுகம் செய்யும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். ஒரு லிட்டர் ரூ.44 என்ற விலையில் விற்பனை செய்யப்படும் ஆவின் கிரீன் மேஜிக் பாலை நிறுத்தாமல், இப்போது வினியோகிக்கப்படுவதைப் போன்றே தொடர்ந்து விற்பனை செய்ய வேண்டும்.
- அன்புமணி



பல்லுயிர் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள அரிட்டாப்பட்டி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சுரங்கம் அமைக்கப்பட்டால் சுற்றுச்சூழல், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். சுரங்கத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கக்கூடாது. கட்சியும் தேர்தலும் இரண்டாம்பட்சம் தான்; அரிட்டாபட்டி மக்களுக்கு நான் அரணாக இருப்பேன்.
- சீமான்



கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை உள்ள மக்கள் கிளந்தெழுவேண்டிய பிரச்சினை ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ பிரச்சினை. இது நடைமுறையில் சாத்தியமற்றது. எந்த ஜனநாயக நாட்டிலும் ஒரே தேர்தல் என்பது கிடையாது. பிரதமர் பதவி வேண்டாம் அமெரிக்கா அதிபரை போல குடியரசு தலைவர் ஆகிவிட வேண்டும் என்ற உள்ள கிடங்கு பிரதமருக்கு உள்ளது.
- வைகோ



மருத்துவமனைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். திண்டுக்கல்லில் 4 மாடி கொண்ட மருத்துவமனை கட்டடம் விபத்து கால நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வசதியும், விபத்து கால தடுப்பு சாதனங்கள் எளிதில் கையாளும் வசதியும் இருந்ததா என்பதை அரசு விசாரித்து நடவடிக்கை வேண்டும்.
- முத்தரசன்



கனமழையின் காரணமாக பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஏரியிலிருந்து உபரிநீராக 5000 கனஅடி நீர் திறந்து வைத்ததை மாவட்ட கலெக்டர் த.பிரபு சங்கர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் பாபு உள்ளார்.

# எல்லாபுரம் ஒன்றியம் திருக்கண்டலம் ஊராட்சியில் மக்கள் தொடர்பு முகாம்



**ஊத்துக்கோட்டை, டிச-14.**

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை வட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் திருக்கண்டலம் ஊராட்சியில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் மதன் தலைமையில் நடைபெற்றது. கிராம நிர்வாக அலுவலர் சரவணன் அனைவரையும் வரவேற்றார். திமுக எல்லாபுரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.சத்தியவேலு, ஒன்றியக்குழு உறுப்பினர் ரவி, ஊராட்சி மன்ற துணைத்தலைவர் லிங்கதுரை மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக திருவள்ளூர் மாவட்ட துணை ஆட்சியர் கணேஷ், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் கற்பகம் ஆகியோர் கலந்து கொண்டு 205 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா, 112 பயனாளிகளுக்கு ஆதிதிராவிடர் இன மக்களின் இணைய வழி பட்டா, 150 பயனாளிகளுக்கு குடும்ப அட்டை, 30 பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்ட உதவிகள், 5 பயனாளிகளுக்கு வேளாண்மை துறை சார்பாக நலத்திட்ட உதவிகள், 5 பயனாளிகளுக்கு தோட்டக்கலைத் துறை சார்ந்த நலத்திட்ட உதவிகள், 5 பயனாளிகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 512 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.1கோடியே 35 லட்சத்து 33 ஆயிரத்து 926 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர். மேலும், பி.எம். ஜென்மன் திட்டத்தின் கீழ் தலா ரூ.5 லட்சத்து ஏழாயிரம் விதம் 25 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட பணி ஆணை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் குமார், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மோகன் குமார், தனி வட்டாட்சியர் மணிகண்டன், மண்டல துணை வட்டாட்சியர்கள் ஞானசௌந்தரி, ரவி, எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக பொருளாளர் கே.எம்.எஸ்.குப்பன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் தியாகராஜன், மீனவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆனந்தன், மேட்டுப்பாளையம் சரண்ராஜ், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் வடமதுரை இ.ஜி.பார்த்திபன், மெய்யூர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முருகன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முகாமின் முடிவில் ஊராட்சி செயலர் உமாநாத் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 27-வது பட்டமளிப்பு விழா



**திருவள்ளூர்,டிச,14.**

திருநின்றவூரில் உள்ள ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 27-வது பட்டமளிப்பு விழா கல்லூரி கலையரங்கத்தில் நடந்தது. இந்த விழாவிற்கு ஜெயா கல்வி குழுமத்தின் தலைவர் பேராசிரியர் அ .கனகராஜ் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் க. நவராஜ், இணைச் செயலாளர் க.தீனா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் ப. குகன் வரவேற்றார். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தலைவர் எஸ்.கே. பிரபாகர் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு கலை மற்றும் அறிவியல் பிரிவுகளைச் சேர்ந்த 1200 மாணவ,மாணவர்களுக்கு இளங்கலை ,முதுகலை பட்டங்களையும், தரவரிசை பட்டியலில் முதலிடம் பிடித்த மாணவ,மாணவிகளுக்கு பதக்கங்களையும் ரொக்க பரிசுகளையும் வழங்கி வாழ்த்தி பேசினார் .இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு பொது சுகாதார ஆய்வக துணை இயக்குனர் எஸ் . ராஜு அறிவியல் பிரிவில் தரவரிசை பட்டியலில் முதலிடம் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்களையும் ரொக்க பரிசுகளையும் வழங்கினார்.இந்த விழாவில் சி ஆர் பி எப் உதவி கமாண்டண்ட் எஸ் .எம். கந்தன் சத்துவன் ,எக்ஸ்ப்ளோ சொல்யூஷன் லிமிடெட் நிறுவன மனித வள தலைமை அலுவலர் சி.மஞ்சுநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கல்வியின் சிறப்பு குறித்தும், தொழில் தொடங்குவதற்கான ஆலோசனைகள் குறித்தும் பேசினர் .

மேலும் கல்லூரியின் துணை முதல்வர் வி.விஜயகுமார், இயக்குனர் சி .சுயம்பழகன்,டீன் ஜெயஸ்ரீ ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தி பேசினர்.



அடையாளம்பட்டில் நடைபெற உள்ள அதிமுக செயற்குழு மற்றும் பொதுகுழு கூட்டத்திற்கு வருகை தரு காலை மற்றும் மதியம் உணவு வழங்குவதற்கான இடத்தை முன்னாள் அமைச்சர்கள் பா.பென்ஜமின், டாக்டர்சி.விஜயபாஸ்கர் தலைமை கழக மேலாளர் மகாலிங்கம் ஆகியோர் ஆய்வு செய்தனர்.உடன் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சிறுனியம் பலராமன், இரா. மணிமாறன்,அமைப்புசெயலாளர் திருவேற்காடு பா.சீனிவாசன் மற்றும் பலர் உள்ளனர்.

# திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, ரூ.37.50 லட்சம் மதிப்பீட்டில் நிவாரண உதவி

## அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி வழங்கினர்



**சென்னை,டிச.14**

அமைச்சர்கள் இ.பெரியசாமி, .அர.சக்கரபாணி. மா.சுப்பிரமணியன் ஆகியோர் திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டு தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் பார்வையிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் நிவாரணம் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம்/ திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் முனைவர் ச.விசாகன், மாவட்ட கலெக்டர்மொ.நா.பூங்கொடி, , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அ.பிரதீப், பழனி சட்டமன்ற உறுப்பினர்.இ.பெ. செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், துணை மேயர்.ராஜப்பா ஆகியோர் உடனிருந்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று இரவு சுமார் 9.45 மணியளவில் சாட்சர்க்யூட் என்கின்ற வகையில் ஒரு மின் விபத்து ஏற்பட்டு சிட்டி மருத்துவமனையில் பாதிப்பு ஏற்பட்டது. தீ விபத்தினால் பெரிய அளவிற்கு நோயாளிகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. இருப்பினும் ஒருவருக்கும் மட்டும் தீ காயம் 10 சதவீதம் என்கின்ற அளவில் காலில் காயம் ஏற்பட்டுள்ளது. தீ விபத்து ஏற்பட்ட சமயத்தில் அதனால் ஏற்படுகின்ற புகை, அதே போல் அந்த மருத்துவமனையிலிருந்து அவசர வழியில் இறங்குவதற்கு தாங்களாகவே யாருடைய அறிவுறுத்தலுமின்றி 6 நபர்கள் லிப்டில் பயணம் செய்துள்ளார்கள். அந்த வகையில் லிப்டில் பயணித்த 6 நபர்கள் சம்பவ இடத்தில் மரணம் அடைந்துள்ளனர். அதில் 3 ஆணிகள், 2 பெண்கள், 1 குழந்தை என 6 நபர்கள் மரணமடைந்துள்ளனர். நூற்றுக்கும் மேல்பட்டவர்களுக்கு புகை சூழ்ந்த காரணத்தினால் பெரிய அளவிலான பாதிப்பு ஏற்பட்டு, அப்போது அங்கே இருந்த தீயணைப்புத்துறை மீட்பு வாகனங்கள், 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், வருவாய்த்துறை மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் ஏராளமான நபர்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைத்து இருக்கிறார்கள். அவர் இந்த சம்பவம் கேள்விபட்டவுடனே மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அவர்கள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பழனி சட்டமன்ற உறுப்பினர், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் மற்றும் மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்களும் விரைந்து வந்து போர்கால அடிப்படையில் பணியாற்றி, அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளை தூக்கி வந்து திண்டுக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட புறநோயாளிகளாக இருந்து சிகிச்சை பெற்று நேற்றே வீடு திரும்பி இருக்கிறார்கள். 3 நபர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மீதமுள்ள 41 நபர்களில் 6 நபர்கள் இறந்த நிலையில் போஸ்ட்மாடம் செய்யப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 4 நபர்களுக்கு பலத்த காயம் அடைந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள். 31 நபர்கள் இலேசான காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதில் தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று இரவு இந்த சம்பவம் குறித்து தெரிந்தவுடன், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களையும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களையும் தொடர்பு கொண்டு உடனடியாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள சொன்னதன் அடிப்படையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அருகில் இருந்த காரணத்தினால் விரைந்து வந்து, விரைந்து பணியாற்றி, மேலும் உயிரிழப்பு இல்லாத நிலையில் தற்காத்து இருக்கிறார்கள். பலத்த காயம் அடைந்த 4 நபர்களில் 1 நபர் மட்டுமே இரண்டு நாட்களில் மீண்டு வருவார் அந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மீதமுள்ள 3 நபர்கள் நல்ல முறையில் உள்ளனர். மற்ற 31 நபர்கள் இலேசான காயங்களுடன் உள்ளவர்கள் மிகவும் தெளிவான நிலையில் உள்ளனர். இவர்கள் அனைவருக்குமே ஏற்கனவே அவர்களுக்கு தனியார் மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வந்த சிகிச்சையை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவர்களுக்கு சிகிச்சை தொடர இருக்கிறார்கள். 35 நபர்களுக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க தயார் நிலையில் உள்ளனர். இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6 இறந்த நபர்களுக்கு தலா ரூ.3 இலட்சம் என மொத்தம் ரூ.18 இலட்சமும், 4 பலத்த காயமடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளோர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் என மொத்தம் ரூ.4 இலட்சமும், 31 இலேசான காயமடைந்து சிகிச்சையில் உள்ளோருக்கு தலா ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.15.50 இலட்சம் என ஆகமொத்தம் 41 நபர்களுக்கு ரூ.37.50 இலட்சம் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது. காயம் அடைந்த 31 நபர்களின் குடும்பங்களுக்கும் எதிர்காலத்தில் எந்தமாதிரி சிகிச்சை தேவையோ விரைந்து செய்ய அமைச்சர் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

# சென்னையில் ரேபிடோ வாகன ஓட்டுநரை தாக்கி வாகனங்களை சேதப்படுத்திய 3 பேர் கைது

**சென்னை டிச 14-**

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முகுந்தன், என்பவர் சென்னையில் தங்கி தனியார் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டு, பகுதி நேரமாக ரேபிடோ பைக் டாக்சி நிறுவனத்தில் அவரது இருசக்கர வாகனத்தை வைத்து ஓட்டி வருகிறார். கடந்த 10 ந் தேதி அன்று காலை, சைதாப்பேட்டை மருத்துவமனை அருகேயிருந்து பெருங்களத்தூருக்கு சவாரி வேண்டும் என ரேபிடோ சவாரி அழைப்பு வந்ததின்பேரில், முகுந்தன் தனது இருசக்கர வாகனத்தில் சைதாப்பேட்டை மருத்துவமனை அருகே சென்றபோது, அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், சிறிது நேரத்தில் சவாரி கேட்ட நபர் உட்பட 3 பேர் முகுந்தனிடம் உன்னால் தான் எங்கள் பிழைப்பு போனது என்று தகராறு செய்து, கையாலும், ஹெல்மட்டாலும் முகுந்தனை தாக்கி அவரது இருசக்கர வாகனத்தை அடித்து சேதப்படுத்தினர். மேலும், அங்கு ரேபிடோ சவாரியாக வந்த 2 இருசக்கர வாகனங்கள் மற்றும் ஒரு காரையும் அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர். தாக்குதலில் காயமடைந்த முகுந்தன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து சைதாபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.சைதாபேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்ததில், சம்பவத்தன்று சைதாப்பேட்டை மருத்துவமனை அருகே, கால் டாக்சி நிறுவனங்களை எதிர்த்து ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததும், அவர்களில் சிலர் தனியார் கால் டாக்சி நிறுவனங்களான ரேபிடோ கால் டாக்சி நிறுவன ஓட்டுநர்களை சவாரியாக வரவழைத்து தாக்கியதும் தெரியவந்தது. அதன்பேரில், மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.சதிஷ்குமார், 2.ராஜகோபால், 3.சிவகுமார், , ஆகிய 3 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும், விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# கோவில் உண்டியலை உடைத்து பணத்தை திருடியவர் கைது

**சென்னை டிச 14-**

சென்னை, வியாசர்பாடி, எஸ்.எம்.நகரில் வசித்து வரும் விஜயகுமாரி, என்பவர் அதே பகுதியில் உள்ள தேவி கருமாரியம்மன் கோவிலை நிர்வகித்து வருகிறார். விஜயகுமாரி நேற்று முன் தினம் கோவிலை பூட்டி விட்டு, நேற்று காலை வந்து பார்த்த போது, யாரோ கோவிலின் உண்டியலை உடைத்து பணத்தை திருடிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து விஜயகுமாரி வியாசர்பாடி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்க்கொண்டனர்.

**கைது**

வியாசர்பாடி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார், தீவிர விசாரணை செய்து மேற்படி கோயில் உண்டியல் உடைத்து பணத்தை திருடிய விநாயகமூர்த்தி என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து கோயில் உண்டியலில் திருடிய ரூ.1,580/- பறிமுதல் செய்யப்பட்டது.

# அயனாவரத்தில் தந்தையை காப்பாற்ற முயன்ற மகளுக்கு சரமாரி வெட்டு: 3 பேர் கைது

**சென்னை டிச 14-**

அயனாவரம் பி.இ கோயில் தெரு, வடக்கு மாட வீதியை சேர்ந்தவர் சுதாகர் (50). இவரது மனைவி நவமணி (40). இவர்களுக்கு சுவாதி (25), சுகாசினி (21) ஆகிய 2 மகள்கள் உள்ளனர். நேற்று முன்தினம் இரவு கஞ்சா போதையில் 3 பேர் சுதாகர் வீட்டிற்குள் நுழைந்து அவரை கத்தியால் வெட்ட பார்த்தனர். சுதாகரின் இளைய மகள் சுகாசினி ஓடி வந்து தடுத்துள்ளார். இதில் அவருக்கு 4 இடங்களில் வெட்டு விழுந்தது. அவரை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.போலீசார் விசாரணையில், வில்லிவாக்கம் சாமியார் தோட்டம் பகுதியை சேர்ந்த ரவி பிரசாத் (26), அயனாவரம் பட்டாச்சாரியார் தெருவை சேர்ந்த சக்திவேல் (26), ஆயிரம் விளக்கு பகுதியை சேர்ந்த சத்யநாராயணன் (29) ஆகிய 3 பேர் இந்த சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்தது. சக்திவேல் முன்விரோத தகராறில் தனது நண்பர்களுடன் சேர்ந்து, சுதாகர் மகளை கத்தியால் வெட்டியது தெரிந்தது. இதையடுத்து, அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# சிறை கைதிகளிடம் செல்போன், கஞ்சா பறிமுதல்: துணை ஜெயிலர் உள்பட 5 பேர் பணியிடை நீக்கம்

**சென்னை டிச 14-**

பூந்தமல்லி சிறையில் கைதிகளிடம் செல்போன், கஞ்சா பறிமுதல் செய்த விவகாரத்தில் துணை ஜெயிலர் உள்பட 5 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். பூந்தமல்லி அடுத்த கரையான்சாவடியில் தனி கிளை சிறை உள்ளது. இங்கு, ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் தொடர்புடையவர்கள் மற்றும் பல்வேறு குற்ற சம்பவங்களில் தொடர்புடையவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நேற்று முன்தினம் பூந்தமல்லி கிளை சிறையில் கைதிகள் அடைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அறையிலும் சிறை வார்டன் மற்றும் காவலர்கள் திடீர் சோதனை நடத்தினர்.அப்போது கைதிகளின் அறைகளிலிருந்து 5 செல்போன், கஞ்சா மற்றும் அதிக அளவில் பணமும் பறிமுதல் செய்யப்பட்டது. இதுகுறித்து பூந்தமல்லி போலீசில் சிறைத்துறை அதிகாரிகள் புகார் அளித்தனர். கடுமையான பாதுகாப்பும் கெடுபிடிகளும் உள்ள சிறைக்குள் செல்போன்கள் கஞ்சா மற்றும் பணம் எப்படி வந்தது என்று பூந்தமல்லி போலீசார் வழக்கு பதிவு செய்து நேற்று முன் தினம் விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் பூந்தமல்லியில் உள்ள சிறை வார்டன்கள், ஜெயிலர்கள் மற்றும் போலீசாரிடம் சிறைத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அதில், கைதிகளுக்கு செல்போன், கஞ்சா சப்ளை செய்தில் போலீசார் உடந்தையாக இருந்தது தெரிந்தது. இதையடுத்து, பூந்தமல்லி தனி கிளை சிறை துணை ஜெயிலர் செல்வராஜ், உதவி ஜெய்லர் ஜேம்ஸ் பிரிட்டோ, தலைமை காவலர் உதயகுமார், மாரி செல்வம் உள்ளிட்ட 5 பேரை சிறைத்துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமணப்பெண்ணின் வைரம், தங்க நகைகள் மற்றும் பணத்தை திருடியவர் கைது

**சென்னை டிச 14-**

சென்னை, அடையார், இந்திரா நகர், 4வது குறுக்கு தெருவில் ஆனந்தமுரளி, என்பவர் வசித்து வருகிறார். ஆனந்த முரளி கடந்த5 ந் தேதி அன்று அவரது மகளின் திருமணம் நடைபெற்ற நீலாங்கரை, வெட்டுவாங்கேணி, பாண்டியன் நகர், சின்னான்டிகுப்பம் மெயின் ரோட்டில் உள்ள தனியார் ரிசார்ட்டில் குடும்பத்தினருடன் தங்கியிருந்த போது, ஒரு அறையில் மணப்பெண்ணிற்கு அணிவிப்பதற்காக வைத்திருந்த சுமார் 15¼ சவரன் எடையுள்ள வைரம் மற்றும் தங்க நகைகள், பணம் ரூ.30,000/-ஐ, அடையாளம் தெரியாத நபர்கள் யாரோ, அறை திறந்து இருந்த போது உள்ளே சென்று, அங்கிருந்த மேற்கண்ட தங்க வைர நகைகள் மற்றும் பணத்தை திருடிக்கொண்டு தப்பிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து ஆனந்தமுரளி நீலாங்கரை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்க்கொண்டனர்.

நீலாங்கரை காவல்நிலைய குற்றப்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்தும், அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை வைத்து திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட சுதர்சன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் 12 சவரன் எடையுள்ள தங்கம் மற்றும் வைர நகைகள் பறிமுதல் செய்யப்பட்டது.அவரது நண்பர்களுடன் சேர்ந்து மேற்படி ரிசார்ட்டில் தங்கம் மற்றும் வைர நகைகளை திருடியுள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட சுதர்சன் நீ சிறையில் அடைக்கப்பட்டார்.

# மதுரவாயல் மேம்பாலம் அருகே ரூ.1.5 லட்சம் போதை மாத்திரை பறிமுதல்: 7 பேர் கைது

**சென்னை டிச 14-**

மதுரவாயல் சுற்றுவட்டார பகுதிகளில் அதிக அளவு கஞ்சா மற்றும் போதை மாத்திரை விற்பனை செய்வதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், மதுரவாயல் போலீசார் பல்வேறு பகுதிகளில் தீவிர சோதனையில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், மதுரவாயல் மேம்பாலம் அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த 2 பேரை பிடித்து சோதனை செய்தனர்.

**போதை மாத்திரம்**

அவர்களிடம் அதிக அளவில் போதை மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது.அவர்கள் தங்களிடம் இருந்த போதை மாத்திரைகளை கைமாற்றிவிட வந்தது தெரியவந்தது. இதையடுத்து, அவர்களிடம் போதை மாத்திரை வாங்க வந்தவர்களையும் மடக்கி பிடித்தனர். விசாரணையில், போதை மாத்திரை கடத்தல் கும்பலில் முக்கிய நபர்களான பூந்தமல்லி அடுத்த காட்டுப்பாக்கம் பகுதியை சேர்ந்த சதீஷ் (26), லோகேஷ் (22) உள்பட 7 பேரை போலீசார் கைது செய்து தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். அவர்களிடம் இருந்து ரூ.1.5 லட்சம் மதிப்புள்ள 2100 போதை மாத்திரைகளை பறிமுதல் செய்தனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி திருவண்ணாமலையில் தீபம் ஏற்றுவதை மலை அடிவாரத்தில் இருந்து பார்வையிட்டு சாமி தரிசனம் செய்தார். அருகில் என். ஆர். காங்கிரஸ் நிர்வாகிகள் இருந்தனர்.



விழுப்புரம் கலெக்டர் அலுவலக வளாகத்தில், மலேசியாவில் நடைபெற்ற ஆசிய பசிபிக் காதுகேளாதோருக்கான சர்வதேச தடகளப் போட்டியில், பீம நாயக்கன் தோப்பு நகராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி பள்ளி மாணவி சுபஸ்ரீ கலந்துகொண்டு தங்கம் வென்றதையடுத்து அமைச்சர் க.பொன்முடியை கலெக்டர் சி.பழனி தலைமையில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மு.பரமேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.




புதுச்சேரியில் 28-வது தேசிய புத்தக கண்காட்சியில் புதிய நூல்களை தமிழ் சங்கத் தலைவரும், புத்தகக் கண்காட்சி குழு தலைவருமான வி.முத்து நூல் வெளியிட்டு, எழுத்தாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். அருகில் வேல்.சொ.இசைக்கலைவன், சங்கரன், பாஞ். ராமலிங்கம், நீலமேகம் அரங்க.முருகையன் மற்றும் பலர் உள்ளனர்.

## வடகிழக்கு பருவமழையினால் நீர்வரத்து அதிகரித்துள்ளதை தொடர்ந்து
# சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு மற்றும் வீராணம் ஏரியில் நிலவரம் குறித்து கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு

கடலூர், டிச.14-

வடகிழக்கு பருவமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்துள்ளதை தொடர்ந்து சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு மற்றும் வீராணம் ஏரியில் களநிலவரம் குறித்து கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது கலெக்டர் தெரிவிக்கையில்,

வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் உள்ள வீராணம் ஏரி பகுதியில் 309.70 மி.மீ. மழை பொழிவு ஏற்பட்டுள்ளது. கனமழை காரணமாக சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு மற்றும் வீராணம் ஏரியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்றுபெய்த கனமழையின் காரணமாக ஒருசில தாழ்வான இடங்களில் குறைந்தபட்ச அளவில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டிற்கு கோமுகி, மணிமுத்தாறு மற்றும் தொழுதூர் அணைக்கட்டில் இருந்து சுமார் 33,000 கனஅடி நீர் வருவதாலும், அணைக்கட்டில் உடைப்பு ஏற்படா வண்ணம் தொடர்ந்து நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் உள்ள வீராணம் ஏரியில் அதிகபட்ச நீர்இருப்பின் அளவு 47.5 அடி ஆகும். அதில் தற்போது 46.8 அடி



இருப்பும், நீர்வரத்து வினாடிக்கு 22,808 கனஅடியாகவும், நீர்வெளியேற்றம் வினாடிக்கு 18,068 கனஅடியாகவும் உள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரியின் நீர் மட்டம் குறைக்கப்பட்டு ஏரியின் நீர்மட்டம் 45.50 அடியாகவும், கொள்ளளவு 978.20 மி.கனஅடியாக குறைக்கப்பட்டது.

வீராணம் ஏரியிலிருந்து நேற்று முதல் லால்பேட்டை கலுங்கு வழியாக வெளியேற்றப்படும் நீர் 500 கன அடி முதல் படிப்படியாக 3000 கனஅடியாக உயர்த்தப்பட்டது. அதனை தொடர்ந்து, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிப்பு கரையோர பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும், தற்பொழுது அரியலூர் மாவட்டம், வீராணம் ஏரியின் நீர்பிடிப்பு பகுதியிலும் பெய்த கனமழை காரணமாக செங்கால்ஓடை வடிகால்கள், பாப்பாக்குடி வடிகால்கள் மற்றும் ஆண்டி பாளையம் வடிகால்கள் ஆகியவை மூலம் வீராணம் ஏரிக்கு சுமார் 22,808 கனஅடி /வினாடி வெள்ள நீர் வந்து கொண்டிருக்கிறது. அணை உடைப்பை தவிர்க்கும் பொருட்டு ஏரியிலிருந்து வெள்ளியங்கால் ஓடை வழியாக 18,068 கனஅடி/வினாடி வெள்ள நீரும், VNSS வழியாக 1,410 கனஅடி/வினாடி நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்பொழுது வரை வெள்ளியங்கால் ஓடைகரைகளில் உடைப்பு ஏதும் ஏற்படவில்லை.

வீராணம் ஏரியின் எதிர் வாய்க்கரைகளில் உள்ள கிராமங்களான சித்தமல்லி, அறந்தாங்கி, அகரபுத்தூர் மற்றும் கருணாகரநல்லூர் ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் சுமார் 2அடி உயரத்திற்கு தேங்கியுள்ளதால் வி.என்.எஸ் மதகு மூலம் வெள்ளாற்றிலும் மற்றும் லால்பேட்டை மதகு மூலம் வெள்ளியங்கால் ஓடைக்கும் சுமார் 18,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் கரை உடைப்பு ஏற்படாதவண்ணம் தொடர்கண்காணிப்பில் ஈடுபட துறை சார்ந்து அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், விருத்தாசலம், காட்டுமன்னார்கோயில், திட்டக்குடி பகுதிகளில் 5 இடங்களில் அமைக்கப்பட்ட நிவாரண முகாம்களில் 116 வீடுகளை சேர்ந்த 382 நபர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமுஷ்ணம் வட்டம், கோவிந்தநல்லூர் ஊராட்சியில் வெள்ள நீர் சூழ்ந்துள்ள பகுதியில் உள்ள மக்களை மீட்கப்பட்டு ஆர்.சி. உதவி பெறும் நடுநிலைப்பள்ளி நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அடிப்படை தேவைகள் பூர்த்திசெய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை கீழ்பாதி ஊராட்சியில் குடியிருப்புகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ள பகுதிகளை பார்வையிட்டு, பாளையங்கோட்டையில் உள்ள பாண்டியன் ஏரியிலிருந்து கண்ணாத்தாள் ஓடை வழியாக வெள்ளநீரினை வெளியேற்றும் இடங்களில் பார்வையிட்டு தொடர்ந்து கண்காணிக்கவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அலுவலர்கள் தங்களுக்கான பணிகளை எவ்வித சுணக்கமுமின்றி மேற்கொண்டு பொதுமக்களை இயற்கை இடர்பாடுகளிலிடமிருந்து பாதுகாத்திட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வின் போது காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச் செல்வன், சிதம்பரம் சார் ஆட்சியர் ரஷ்மி ராணி செயற்பொறியாளர் (நீர்வளத்துறை) காந்தரூபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# செஞ்சி அருணாசலேஸ்வரர் கோவிலில் தீபத்திருவிழா



செஞ்சி, டிச.14-

செஞ்சி பீரங்கி மேடு பகுதியில் உள்ள அருணாசலேஸ்வரர் கோவிலில் தீபத் திருவிழா மிக சிறப்பாக நடைபெற்றது. இதனை முன்னிட்டு 11ஆம் தேதி கொடியேற்றத்துடன் விழா தொடங்கி நடைபெற்றது. 12ஆம் தேதி பைரவ ஹோமம் உற்சவர் திருக்கோயில் வீதி உலா ஆகியவை நடைபெற்றது.

நேற்று தீபத் திருவிழாவை முன்னிட்டு அதிகாலை நாலு மணிக்கு மேல் பரணி தீபம் ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து காலையில் அருணாசலேஸ்வரருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து மாலை 6 மணிக்கு கோவில் கோபுரத்தில் மகாதீபம் ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை தொடர்ந்து கோவில் வளாகத்தில் ஏராளமான பெண்கள் விளக்கேற்றி வழிபட்டனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

இரவு வானவேடிக்கையுடன் சுவாமி வீதி உலா நடைபெற்றது.

இதேபோல் செஞ்சி பீரங்கிமேடு இளைஞர்கள் சார்பில் செஞ்சி ராணிக் கோட்டை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது. இதில் ஏராளமான இளைஞர்கள் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சி மற்றும் திட்டப்பணிகள்
### கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி ஆய்வு



வேலூர், டிச.14-

வேலூர் கலெக்டர் வே.இரா. சுப்புலெட்சுமி, காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் சாலை பணிகள், பாலப்பணிகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி போன்ற வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்தும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஆய்வு மேற்கொண்டார்.

வேலூர் கலெக்டர் காட்பாடி ஊராட்சி ஒன்றியம், சேர்க்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவு, இரத்த பரிசோதனை மையம், ஸ்கேன் செய்யும் அறை, கர்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனை பிரிவு, ஊசி போடும் அறை, பிரசவத்திற்கு பின்னான கவனிப்பு அறை, மருந்தகம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் மருத்துவமனையில் சேகரமாகும் மருத்துவ கழிவுகள் முறையாக பாதுகாப்பாக அகற்றப்படுகிறதா என மருத்துவ அலுவலரிடம் கேட்டறிந்தார். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 15-வது மத்திய நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் ரூபாய் 1.28 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து தேன்பள்ளி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த உடற்பயிற்சி மையத்திற்கு தேவையான உடற்பயிற்சி உபகரணங்களை விரைந்து கொள்முதல் செய்ய ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் மாதாண்டகுப்பம் ஊராட்சி, காட்டூர் கிராமத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளை பார்வையிட்டு பயனாளிகளிடம் வீட்டிற்க்கான தொகை மற்றும் சிமெண்ட் மூட்டைகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என கேட்டறிந்தார்.

தொடர்ந்து காட்பாடி ஊராட்சி ஒன்றியம், அம்முண்டி கிராமத்தில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூபாய் 3.20 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் பாலம் அமைக்கும் பணியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் சீனிவாசன், காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்தகுமார், கனகராஜ், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் அருணா ஆகியோர் உடனிருந்தனர்.

## புதுச்சேரி புயல் பாதிப்புகள் குறித்து
# பேரிடர் மேலாண்மை குழுவினரிடம் ஆதாரங்களை மாவட்ட நிர்வாகம் அளிக்க தவறியுள்ளது
### புதுச்சேரி அதிமுக செயலாளர் அன்பழகன் குற்றச்சாட்டு

புதுச்சேரி டிச. 14,

புதுச்சேரி மாநில அதிமுக செயலாளர் அன்பழகன் செய்தியாளர்களிடம் பேசியதாவது: புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி மாநிலத்தை பார்வையிட வருகை தந்த மத்திய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மை குழுவினரிடம் பாதிப்புகள் குறித்த விவரங்கள், அதற்கான புகைப்படங்கள், வீடியோ ஆதாரங்களுடன் மாவட்ட நிர்வாகம் அளிக்க தவறியுள்ளது. இதனால் மத்திய அரசிடம் இருந்து நமக்கு உடனடியாக வரவேண்டிய பேரிடர் நிவாரணம் உதவி இன்று வரை மத்திய அரசால் வழங்கப்படவில்லை. இதையே காரணமாக வைத்துக்கொண்டு மத்தியில் ஆளும் பாஜக அரசும் நம் மாநிலத்திற்கு உரிய நிவாரணம் நிதியை வழங்காதது கண்டிக்கத்தக்கதாகும். பெருமழை, புயலை எதிர்கொள்ள அரசு தயாராக இருக்கிறது என பலமுறை அரசு சார்பில் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. பெருமழை மற்றும் பெரு வெள்ளத்தால் எந்தெந்த தாழ்வான பகுதிகளில் நீர் தேங்கும் என்பதை கூட வருவாய்துறை அதிகாரிகள் இனம் காணவில்லை. நம் மாநிலத்தை ஒட்டியுள்ள வீடுர் அணை, சாத்தனூர் அணையில் இருந்து நீர் திறந்துவிடப்பட்டால் நம் மாநிலத்தில் எந்தெந்த பகுதிகள் பாதிக்கப்படும் என்பதை கூட அறியாமல் மாவட்ட நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. நகரப்பகுதிகளில் கழிவு நீர் வாய்க்காலில் நீர் பெருக்கெடுத்து ஓடி உப்பளம் உள்ளிட்ட நகரப்பகுதிகளில் உள்ள ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மழை நீர் இடுப்பளவு உட்புகுந்து வீட்டு உபயோக பொருட்கள் அனைத்தும் சேதமடைந்து இரண்டு தினங்களில் பாதிப்பை ஏற்படுத்திய மழை நீர் முழுமையாக வற்றியது. இந்த மழை நீர் தேங்கிய போது கூட மாவட்ட நிர்வாகத்தின் தாசில்தார்கள் யாரும் அதை பார்வையிட்டு அதற்கான போட்டோ, வீடியோ ஆதாரங்களை கூட தயார் செய்யவில்லை. இது மாவட்ட நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயலாகும்.

குறிப்பாக புதியதாக பொறுப்பேற்றுள்ள சிறுவயதில் உள்ள பல தாசில்தார்கள், துணை தாசில்தார்கள், கர்ணம், வருவாய் ஆய்வாளர்கள், மழையின் பாதிப்பை எதிர்கொள்ள மனதளவில் கூட உணர்வு பூர்வமாக உணராமல் ஏதோ கடமைக்கு தங்களது அறையில் இருந்து பணி செய்தனர். உப்பளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை நாம் சம்பந்தப்பட்ட தாசில்தாரை நேரில் அழைத்து வந்து காண்பித்த பிறகு தான் அவருக்கு இந்த வெள்ள சேதமே தெரியவந்தது. தமிழகத்தில் ஆட்சி செய்யும் விடியா திமுக அரசு எவ்வித முன்னெச்சரிக்கையும் புதுச்சேரி அரசுக்கு தெரிவிக்காமல் வீடூர், சாத்தனூர் அணைகளில் இருந்து ஒரு விநாடிக்கு சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் கனஅடி தண்ணீரை திறந்துவிட்டதில் வில்லியனூர், மண்ணாடிப்பட்டு, பாகூர், நெட்டப்பாக்கம், ஏம்பலம், மணவெளி, திருபுவனை உள்ளிட்ட பகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் 3 அடி உயரத்திற்கு தண்ணீர் உட்புகுந்து வீட்டு உபயோக பொருட்கள் அத்தனையும் சேதமடைந்தன. மத்திய நிவாரண ஆய்வுக்குழு நம் மாநிலத்தை பார்வையிட வருகை தந்த போது வெள்ளம் பாதித்த தண்ணீர்கள் வடிந்துவிட்டதால் பாதிப்புகளை அவர்களால் காணமுடியவில்லை.

இதுபோன்ற பாதிப்புகளுக்கான ஆதாரங்களை மாவட்ட நிர்வாகம் வழங்க தவறியது என்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். புதுச்சேரி நகரப்பகுதியை ஒட்டியுள்ள உழவர்கரை பத்திரப்பதிவு துறையில் தினசரி பல நூற்றுக்கணக்கானவர்கள் பத்திரம் பதிவு செய்ய வருகின்றனர். ஆனால் அவ்விடத்தில் ஒரே ஒரு சார் பதிவாளர் மட்டும் உள்ளார். இதனால் பத்திரப்பதிவு செய்ய காலதாமதம் ஏற்படுகின்றது. அந்த இடத்தின் பத்திர பதிவின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு தினசரி இரண்டு சார் பதிவாளர்களை பணி செய்ய கலெக்டர் உத்தரவிட வேண்டும். உழவர்கரை பத்திரபதிவு துறையில் இணைய வசதி வேகமாக இல்லாததால் பத்திரபதிவு செய்வதில் மிகுந்த சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். அதனால் பத்திரப் பதிவு செய்ய வரும் பொதுமக்களுக்கும், அங்கு பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கும் பல்வேறு தேவையற்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு பத்திரபதிவு துறை செயலர் மதிப்புக்குரிய கலெக்டர் உழவர்கரை பத்திரப்பதிவு துறை செயல்பாடுகளை உடனடியாக சீர்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மீது முதலமைச்சர் மாவட்ட ஆட்சியை அழைத்து உத்தரவிட வேண்டும். அரசால் அறிவிக்கப்பட்ட புயல் நிவாரண நிதி உதவி ரூபாய் 5000 அனைத்து குடும்பத்தினருக்கும் அவரவர் வங்கி கணக்கில் போடப்பட்டுள்ளது. இதை வங்கியில் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஏழை மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகைகள், வட்டி தொகைகள், அபராத வட்டி தொகைகள், குறைந்தபட்ச இருப்பு தொகை ஆகியவற்றை பிடித்தம் செய்கின்றன. அரசால் போடப்பட்டுள்ள நிவாரணத் தொகையில் வங்கிகள் எந்த பணத்தையும் பிடித்தம் செய்யக்கூடாது என அரசு வங்கிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது மாநில கழக அவைத் தலைவர் அன்பானந்தம், மாநில துணைச் செயலாளர் நாகமணி, மாநில அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் பாப்புசாமி, மாநில எம்ஜிஆர் மன்ற செயலாளர் பார்த்தசாரதி, மாநில இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் தமிழ் வேந்தன், ஆகியோர் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# செஞ்சியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு அரசு நிவாரண உதவிகள்
### மஸ்தான் எம்.எல்.ஏ வழங்கினார்



செஞ்சி, டிச.14-

விழுப்புரம் மாவட்டத்தில் பெஞ்சால் புயல் மழையால் பெரும் சேதம் ஏற்பட்டது. இந்தப் புயல் சேதத்தால் பாதிப்படைந்த வீடுகள் மற்றும் நிலங்களுக்கு நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின்உத்தரவிட்டுள்ளார். அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த குடும்பங்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதையடுத்து செஞ்சி சட்டமன்ற தொகுதிகளில் தமிழக அரசின் 2000 ரூபாய்நிவாரணம் வழங்கும்பணி நடைபெற்று வருகிறது.

செஞ்சி பேரூராட்சி செஞ்சிகூட்டுறவு விவசாய வங்கியில்அரசு சார்பில் வழங்கப்படும் நிவாரண உதவிகளை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு புயல் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பஅட்டைதாரர்களுக்கு 2000 ரூபாய் நிவாரணத் தொகையை வழங்கினார். இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சிமன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், நகர செயலாளர் கார்த்திக், கூட்டுறவு வங்கி செயலாளர் திருநாவுக்கரசு, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், வங்கி பணியாளர்கள், திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரியில் அ.ம.மு.க. சார்பில் பொது செயலாளர் டி.டி.வி.தினகரன் பிறந்த நாளையொட்டி தெற்கு மாநில செயலாளர் எஸ்.டி.சேகர் தலைமையில் பொது மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. அருகில் இணை செயலாளர் காமாட்சி உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூரில் வருகிற 20-ந் தேதி விவசாயிகள் குறைதீர்வு நாள் முகாம்
### கலெக்டர் க.தர்ப்பகராஜ் தகவல்

திருப்பத்தூர், டிச.14-

திருப்பத்தூர் மாவட்டத்தில் நவம்பர்- 2024-ம் மாதத்திற்குரிய விவசாயிகள் குறை தீர்வு நாள் முகாம் 20.12.2024 அன்று கலெக்டர் அலுவலக வளாகத்தில் காலை 10.30 மணியளவில் மக்கள் குறை தீர்வு நாள் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இம்முகாம் நாளில் கலெக்டர், கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மக்கள் குறை தீர்க்கும் கூட்டரங்கில் விவசாயிகளிடம் குறைகளை நேரடியாக கேட்டறிந்து தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

மேற்காணும் முகாமில் மாவட்ட அளவிலான அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். அது சமயம் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று மனுதாரருக்கு உடனடியாக ஒப்புகைச்சீட்டும் வழங்கப்படும்.

எனவே, திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட விவசாயிகள் அனைவரும் மேற்குறிப்பிட்ட நாளில் கலந்து கொண்டு பயனடைய வேண்டுமென கலெக்டர் க.தர்ப்பகராஜ் கேட்டுக்கொள்கின்றார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## இந்திய அணி முன்னிலை பெறுமா..?

# 3-வது டெஸ்ட் இன்று பிரிஸ்பேனில் துவக்கம்



**பிரிஸ்பேன், டிச. 14-**

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகள் மோதும் 3-வது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் இன்று தொடங்குகிறது. இதில் வெற்றிப்பெற்று இந்திய அணி முன்னிலை பெறுமா என்ற ஆவல் ரசிகர்கள் இடையே மேலோங்கியுள்ளது.

**5 போட்டிகள்...**

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியாவும், அடிலெய்டில் நடைபெற்ற 2-வது போட்டியில் ஆஸ்திரேலியாவும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள காபா மைதானத்தில் இன்று தொடங்குகிறது. இதையொட்டி இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

**2 நாட்களில்....**

இந்நிலையில் இந்த போட்டி நடைபெறும் 5 நாட்களும் பிரிஸ்பேனில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. போட்டி தொடங்கும் முன் அங்கு 60 சதவீதம் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 2-வது நாளில் 59 சதவீதம் மழையும், 3-வது நாளில் 60 சதவீதமும், கடைசி 2 நாட்களில் மழை பெய்ய வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகிறது.

**காபா மைதானத்தில்....**

3-வது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள காபாவில் ஸ்டேடியத்தில் இன்று இந்திய நேரப்படி அதிகாலை 5.50 மணிக்கு தொடங்குகிறது. கடைசியாக 2021-ல் காபா மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 32 வருடங்கள் கழித்து ஆஸ்திரேலியாவை தோற்கடித்த இந்தியா வரலாற்று வெற்றியை பெற்றது. அதேபோல் இம்முறையும் இந்திய அணி வெற்றி பெறும் முனைப்பில் உள்ளது.

**ஆஸ்திரேலியா வெற்றி...**

ஆனால் நடப்பு தொடரில் அடிலெய்டில் நடைபெற்ற 2-வது போட்டியில் இந்திய அணியை 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா வீழ்த்தியது. இந்த போட்டியில் இந்திய பேட்ஸ்மேன்களுக்கு எதிராக ஆஸ்திரேலிய கேப்டன் கம்மின்ஸ் பவுன்சர்களை வீசினார். 2-வது இன்னிங்சில் 5 விக்கெட்டுகள் எடுத்த அவர் ஆஸ்திரேலியாவின் வெற்றியில் முக்கிய பங்காற்றினார்.

**கம்மின்ஸ் எச்சரிக்கை...**

இந்நிலையில் காபாவிலும் இந்திய அணியை வீழ்த்த அதே போன்ற திட்டங்களை தயாராக வைத்துள்ளதாக ஆஸ்திரேலிய கேப்டன் கம்மின்ஸ் எச்சரித்துள்ளார். இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு:- "ஆம் அடுத்த போட்டியிலும் பவுன்சர்களை வீசுவதற்கு சாத்தியங்கள் உள்ளன. 2-வது போட்டியில் அது வேலை செய்தது. அது மட்டுமல்லாது எங்களிடம் வேறு திட்டமும் உள்ளது. நான் எப்போதும் 2 திட்டங்களை (ஏ மற்றும் பி) தயாராக வைத்திருப்பேன். ஒரு திட்டம் வேலையாகவில்லையெனில் மற்றொன்றை பயன்படுதுவேன்.

**பயன்படுத்துவோம்...**

2வது போட்டியில் அந்தத் திட்டம் வேலை செய்ததால் இந்தப் போட்டியிலும் ஏதோ ஒரு நேரத்தில் அதை நாங்கள் பயன்படுத்துவோம். காபா மைதானத்தை நேற்று நான் பார்த்தேன். அது கடந்த சில வருடங்களை போல் நன்றாக உள்ளது. கடந்த சில தினங்களாக சூரிய வெளிச்சமும் அதன் மீது நன்றாக பட்டது. இருப்பினும் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான கடந்த போட்டியை போல் அது இருக்கும் என்று நான் நினைக்கவில்லை" என கூறினார்.

## சையத் முஷ்டாக் அலி கோப்பை: இறுதிக்கு முன்னேறியது மும்பை



**பெங்களூரு, டிச. 14-**

சையத் முஷ்டாக் அலி கோப்பை தொடரிலி பரோடாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு மும்பை அணி முன்னேறியுள்ளது. மும்பை தரப்பில் அதிரடியாக ஆடிய ரகானே 98 ரன்கள் எடுத்தார்.

**பெங்களூருவில்...**

17-வது சையத் முஷ்டாக் அலி டி20 கிரிக்கெட் போட்டி இறுதி கட்டத்தை எட்டி விட்டது. இந்த தொடரில் லீக் சுற்று, காலிறுதி சுற்று ஆட்டங்களின் முடிவில் மும்பை, பரோடா, டெல்லி, மத்திய பிரதேசம் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. அரையிறுதி ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. இதில் நேற்று காலை பெங்களூருவில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் மும்பை - பரோடா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பரோடா அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 158 ரன்கள் மட்டுமே எடுத்தது. பரோடா தரப்பில் அதிகபட்சமாக ஷிவாலிக் சர்மா 36 ரன்கள் எடுத்தார். மும்பை தரப்பில் சூர்யன்ஷ் ஷெட்ஜ் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**ரகானே அபாரம்...**

தொடர்ந்து 159 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை களம் இறங்கியது. மும்பையின் தொடக்க ஆட்டக்காரர்களாக பிரித்வி ஷா மற்றும் அஜிங்ய ரகானே ஆகியோர் களம் இறங்கினர். இதில், பிரித்வி ஷா 8 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து ஸ்ரேயாஸ் ஐயர் களம் புகுந்தார். ஸ்ரேயாஸ் - ரகானே இணை அதிரடியாக ஆடி ரன்கள் சேர்த்தது. இதில் பரோடா பந்துவீச்சை ரகானே அடித்து நொறுக்கினார். அதிரடியாக அரைசதத்தை கடந்த அவர் சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 98 ரன்னில் அவுட் ஆனார். மறுபுறம் ஸ்ரேயாஸ் ஐயர் 46 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து ஷிவம் துபே - சூர்யன்ஷ் ஷெட்ஜ் ஜோடி சேர்ந்தனர்.

**164 ரன்கள் குவிப்பு...**

இறுதியில் மும்பை அணி 17.2 ஓவர்களில் 4 விக்கெட்டை மட்டும் இழந்து 164 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. மும்பை அணி இறுதிப்போட்டியில் டெல்லி - மத்திய பிரதேசம் இடையிலான போட்டியில் வெற்று பெறும் அணியுடன் மோதும்.

## உத்தர பிரதேச மாநிலம்

# திரிவேணி சங்கமத்தில் பிரதமர் மோடி வழிபாடு



**டெல்லி, டிச. 14-**

உத்தர பிரதேசத்தில் உள்ள திரிவேணி சங்கமத்தில் பிரதமர் மோடி வழிபாடு செய்தார்.

உலகின் மிகப்பெரிய ஆன்மீக, கலாசார மற்றும் மத நிகழ்வுகளில் ஒன்றாக 'மகா கும்பமேளா' விளங்குகிறது. இந்நிலையில், 'மகா கும்பமேளா 2025' வரும் ஜனவரி 13-ந்தேதி முதல் பிப்ரவரி 26-ந்தேதி வரை 45 நாட்கள் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொண்டு திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவதற்காக இந்தியா முழுவதும் இருந்து கோடிக் கணக்கான மக்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மகா கும்பமேளாவிற்கான ஏற்பாடுகளை மத்திய அரசுடன் இணைந்து மாநில அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. பக்தர்களின் தேவைக்காக 1.5 லட்சம் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. சுமார் 1.6 லட்சம் குடில்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மகா கும்பமேளாவிற்காக உத்தர பிரதேச மாநிலத்தில் 66 கிராமங்களை ஒருங்கிணைத்து புதிய நிர்வாக மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நடைபெற உள்ள இடத்திற்கு பிரதமர் மோடி நேற்று நேரில் சென்றார். அங்கு கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி ஆகிய நதிகள் இணையும் இடமாக திகழும் திரிவேணி சங்கமத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் பிரதமர் மோடி கலந்து கொண்டு வழிபாடு செய்தார். அப்போது உத்தர பிரதேச முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத், கவர்னர் ஆனந்திபென் பட்டேல் ஆகியோர் உடனிருந்தனர்.

மேலும் அங்குள்ள பிரசித்தி பெற்ற கோவில்களுக்கு சென்று பிரதமர் மோடி சாமி தரிசனம் செய்தார். முன்னதாக ஆற்றில் படகு சவாரி மேற்கொண்ட பிரதமர் மோடி, மகா கும்பமேளாவிற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

## கனமழை காரணமாக இன்று

# 3 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை

**நெல்லை,டிச. 14-**

கனமழை காரணமாக இன்று 3 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மிகத்தீவிரமாக உள்ளது. மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று லட்சத்தீவு - மாலத்தீவு பகுதிகளில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணிநேரத்தில் மேற்கு திசையில் நகர்ந்து படிப்படியாக வலுவிழக்கக் கூடும்.

தெற்கு அந்தமான் கடல் பகுதியின் மேல் நாளை ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவக்கூடும். இதன் காரணமாக அடுத்த 48 மணிநேரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவாகக்கூடும். இது மேற்கு-வடமேற்கு திசையில் தமிழக கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடும். இதன் காரணமாக தென் தமிழகத்தில் அநேக இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரிரு இடங்களில் அதி கனமழையும், ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று தெரிவித்திருந்தது.

இதனிடையே, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி போன்ற தென்மாவட்டங்களில் நேற்று முதல் கனமழை பெய்து வருகிறது.இதன் காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கனமழை காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று (சனிக்கிழமை) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் இன்று சிறப்பு வகுப்புகள் எதுவும் நடத்தக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கனமழையால் பாதிக்கப்பட்ட பயிருக்கு

# உரிய நிவாரணம் வழங்க அரசுக்கு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்



**சென்னை, டிச. 14-**

கனமழையால் பாதிக்கப்பட்ட பயிருக்கு உரிய நிவாரணம் வழங்க அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கடந்த இரண்டு நாட்களாக குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக பெய்துவரும் கனமழையால் டெல்டா மாவட்டங்களான திருவாரூர், நாகப்பட்டினம் மயிலாடுதுறை, தஞ்சாவூர், கடலூர் உள்ளிட்ட பல மாவட்டங்களில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளன கனமழையின் காரணமாக அப்பகுதிகளில் ஓடும் ஆறுகள் மற்றும் சிற்றாறுகளில் தண்ணீர் அதிக அளவு சென்று கொண்டிருக்கிறது.

ஆற்றின் கரைகள் பல இடங்களில் பலவீனமாக இருப்பதால் கரைகள் உடைந்து பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, வருவாய் மற்றும் நீர்வளத் துறை அதிகாரிகள் ஆற்றங்கரை ஓரங்களிலும், ஏரிகள், வாய்க்கால்கள் உள்ளிட்ட நீர் நிலைகளின் பலவீனமான கரைப் பகுதிகளைக் கண்டறிந்து, உடனடியாக மணல் மூட்டைகளை அடுக்கி அவற்றை பலப்படுத்துவதுடன், கனமழையால் ஆறு, ஏரி, வாய்க்கால் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளிலும், நீர்வழிப் பாதைகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்துகிறேன்.

மேலும், அரசு அதிகாரிகள் கன மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று தண்ணீரில் மூழ்கியுள்ள வேளாண் பயிர்களைக் கணக்கெடுத்து உடனடியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

திருநெல்வேலி உள்ளிட்ட பல மாவட்டங்களில் இரு நாட்களாக பெய்த கன மழையால் குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. மழைநீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் உள்ள நீரை கனரக மோட்டார்களை வைத்து வெளியேற்றவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குமிடம், உணவு, மருத்துவ சிகிச்சைகளை வழங்கவும் வலியுறுத்துகிறேன்.

கடந்த வாரம் பெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும். வெள்ள நீரால் பயிர்கள் மூழ்கி பாதிப்படைந்த விவசாயிகளுக்கும் உரிய நிவாரணத்தை வழங்குமாறு ஏற்கெனவே திமுக அரசை வலியுறுத்தி இருந்தேன். பல இடங்களில் நிவாரணங்கள் உண்மையாகவே பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் ஆங்காங்கே சாலை மறியலில் ஈடுபட்டுவருவதாக ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. எனவே, அரசின் நிவாரணப் பொருட்கள் மற்றும் நிவாரணத் தொகை பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வழங்க திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## 3-வது டெஸ்ட் போட்டி:

# ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு



**பிரிஸ்பேன், டிச. 14-**

இந்தியாவுக்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ள ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஜோஷ் ஹசில்வுட் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

**இந்தியா வெற்றி...**

ஆஸ்திரேலியா நாட்டுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி ஐந்து போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையில் ஏற்கனவே இரண்டு போட்டிகள் நடைபெற்று முடிந்தன. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்திய அணி 295 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அடிலெய்டில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் இரு அணிகள் இடையிலான தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் உள்ளது.

**ஜோஷ் ஹேசில்வுட்...**

இதனிடையே இந்த இரு அணிகள் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள காபா மைதானத்தில் நாளை (டிசம்பர் 14) தொடங்குகிறது. இந்த போட்டியில் வெற்றி பெற இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்திய அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான ஆஸ்திரேலியாவின் 11 வீரர்கள் அடங்கிய பிளேயிங் 11 அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஆஸ்திரேலியா தரப்பில் கடந்த போட்டியில் காயம் காரணமாக விலகிய வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

**ஆஸ்திரேலிய அணி....**

இதுதவிர அந் அணியில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. ஆஸ்திரேலிய அணியின் பிளேயிங் 11 அணியில்: உஸ்மான் கவாஜா, நாதன் மெக்ஸ்வீனி, மார்னஸ் லபுஷேன், ஸ்டீவ் சுமித், டிராவிஸ் ஹெட், மிட்செல் மார்ஷ், அலெக்ஸ் கேரி, பேட் கம்மின்ஸ், மிட்செல் ஸ்டார்க், நாதன் லயன் மற்றும் ஜோஷ் ஹேசில்வுட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## செங்கோட்டைக்கு உரிமை கோரிய வழக்கு தள்ளுபடி

**டெல்லி, டிச. 14-**

செங்கோட்டைக்கு உரிமை கோரி முகலாய வம்சாவளியை சேர்ந்தவரின் மனைவி தாக்கல் செய்த வழக்கை டெல்லி ஐகோர்ட் தள்ளுபடி செய்துள்ளது.

செங்கோட்டைக்கு உரிமை கோரி முகலாய வம்சாவளியை சேர்ந்தவரின் மனைவி தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

கடந்த 2021-ம் ஆண்டு டெல்லி ஐகோர்ட்டில் சுல்தானா பேகம் என்ற பெண் தாக்கல் செய்த மனுவில், "முகலாய பேரரசின் கடைசி மன்னர் பகதூர்ஷா சாபர், கடந்த 1857-ம் ஆண்டு ஆங்கிலேய அரசால் வீழ்த்தப்பட்டார். அவரது சொத்துகள் அனைத்தையும் கிழக்கிந்திய கம்பெனி சட்டவிரோதமாக எடுத்துக் கொண்டது.

இந்தயா சுதந்திரம் அடைந்த பிறகு, முகலாய பேரரசின் கடைசி வாரிசான மிர்சா முகமது பேதர் பக்திற்கு இந்திய உள்துறை அமைச்சகம் 1960-ம் ஆண்டு முதல் பென்சன் வழங்க தொடங்கியது. இந்நிலையில், 1980 மே 22-ந்தேதி மிர்சா முகமது பேதர் பக்த் காலமானதையடுத்து, அவரது மனைவி சுல்தானா பேகத்திற்கு 1980 ஆகஸ்ட் 1-ந்தேதி முதல் இந்திய அரசு பென்சன் வழங்கி வருகிறது. அந்த பென்சன் தொகை மிகவும் குறைவான அளவாக இருக்கிறது.

முகலாய வம்சாவளியை சேர்ந்தவரின் மனைவியான தனக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய டெல்லி செங்கோட்டையின் உரிமையை இந்திய அரசு தர மறுக்கிறது. இது அடிப்படை உரிமை மட்டுமின்றி அரசியலமைப்பு சட்ட உரிமை 300ஏ மற்றும் மனித உரிமையை மீறும் செயலாகும்" என்று கூறப்பட்டிருந்தது. எனவே, டெல்லி செங்கோட்டையின் உரிமையை தனக்கு வழங்க இந்திய அரசுக்கு கோர்ட்டு உத்தரவிட வேண்டும் என மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த தனி நீதிபதி அமர்வு, மிகவும் காலதாமதமாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டது. இதற்கு மனுதாரர் தரப்பில், அவர் கல்வி அறிவு பெறாதவர் என்பதால், அவரால் சரியான நேரத்தில் கோர்ட்டை நாட முடியவில்லை என்ற காரணம் கூறப்பட்டது. ஆனால் அதை ஏற்றுக்கொள்ள கோர்ட்டு மறுத்துவிட்டது. தொடர்ந்து அந்த மனுவை நீதிபதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து மனுதாரர் டெல்லி ஐகோர்ட்டில் மேல் முறையீடு செய்தார். இந்த மனு டெல்லி ஐகோர்ட் தலைமை நீதிபதி விபு பக்ரு, நீதிபதி துஷார் ராவ் கடேலா ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு பிறகு மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தனர். காலதாமதத்திற்கு மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட காரணங்களை ஏற்றுக்கொள்ளாத நீதிபதிகள், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## அவரை மாதிரி பார்த்ததில்லை:

# எம்.எஸ்.டோனியை புகழ்ந்த லக்னோ அணி உரிமையாளர்

**மும்பை, டிச. 14-**

அவரை மாதிரி ஒரு கேப்டனை பார்த்ததில்லை என்று எம்.எஸ்.டோனிக்கு லக்னோ அணி உரிமையாளர் புகழாரம் சூட்டியுள்ளார்.

**போட்டியில் ஓய்வு...**

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான கேப்டன்களில் ஒருவராக போற்றப்படுபவர் மகேந்திரசிங் டோனி. ஐ.பி.எல். தொடரின் முதல் சீசனிலிருந்தே சென்னை அணியின் கேப்டனாக செயல்பட்டு வந்த டோனி 5 கோப்பைகளையும் 2 சாம்பியன்ஸ் லீக் டி20 கோப்பைகளையும் வென்றுள்ளார். 2019-ம் ஆண்டுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற அவர் , ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வருகிறார். தற்போது 43 வயதை எட்டியுள்ள டோனி விளையாடுவதை பார்க்க, அவர் ஆடும் மைதானங்களில் எல்லாம் ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

**பார்த்ததில்லை...**

இந்நிலையில் கடந்த ஐ.பி.எல். தொடரில் லக்னோ - சென்னை இடையிலான ஆட்டம் லக்னோவில் நடைபெற்றபோது டோனிய காண மைதானத்தை சிஎஸ்கே ரசிகர்கள் சூழ்ந்திருந்ததாக லக்னோ சூப்பர் ஜெயிண்ட்ஸ் அணியின் உரிமையாளர் சஞ்சீவ் கோயங்கா தெரிவித்துள்ளார். மேலும் அவரை போன்ற கேப்டனை பார்த்ததில்லை என்றும் புகழாரம் சூட்டியுள்ளார். இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு:- "எம்.எஸ். டோனி போன்ற கேப்டனை நான் பார்த்ததில்லை. அவருடைய சிந்தனை, அணுகுமுறை ஆகியவை வித்தியாசமானது. இன்றைய நாளிலும் அவர் விளையாடுவதை பார்ப்பது அற்புதமானது.

**அதிகமாக தெரியும்...**

பதிரனா அனுபவமில்லாத வேகப்பந்து வீச்சாளராக வந்தார். அவரை டோனி எங்கே பார்த்து கொண்டு வந்தார் என்று தெரியவில்லை. தற்போது அவரை டோனி மேட்ச் வின்னராக உருவாக்கியுள்ளார். அவருக்கு எப்படி தன்னுடைய வீரர்களை பயன்படுத்த வேண்டும் என்பது தெரியும். டோனியிடம் பேசும் போதெல்லாம் அவரிடம் நான் எதையாவது கற்றுக் கொள்வேன். லக்னோவில் டோனி விளையாடும் போதெல்லாம் எங்கள் அணியின் ஜெர்சியை விட சிஎஸ்கே ஜெர்சிதான் மைதானத்தில் அதிகமாக தெரியும்.

**இதை ரசிக்கிறேன்...**

எனக்கு கிரிக்கெட்டைப் பற்றி ஆர்வம் கொண்ட 11 வயது பேரன் இருக்கிறார். 5 - 6 வருடங்களுக்கு முன்பாக அவருக்கு கிரிக்கெட்டை எப்படி விளையாட வேண்டும் என்பது பற்றி டோனி கற்றுக் கொடுத்தார். அவரிடம் அதிகப்படியான கேள்விகளை கேட்ட என்னுடைய பேரனிடம், 'அவரை விடு' என்று சொன்னேன். அதற்கு, 'குழந்தையை விடுங்கள் கேட்கட்டும். நான் இதை ரசிக்கிறேன்' என்று என்னிடம் டோனி கூறினார். பின்னர் குழந்தையிடம் டோனி ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பேசினார். அதில் நீங்கள் மற்றவரிடம் எப்படி பேச வேண்டும் என்பதை கற்றுக் கொள்ளலாம். அதனாலேயே அவர் டோனியாக இருக்கிறார்" என்று கூறினார்.

# அடையாற்றில் வெள்ளப்பெருக்கு: கரையோர மக்கள் வெளியேற்றம்

**சென்னை, டிச. 14-**

அடையாறு ஆற்றில் வெள்ளப்பெருக்கு காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கரையோரப் பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக, சென்னையில் இரண்டு நாட்களாக கன மழை பெய்தது. இதனால், சென்னையை சுற்றியுள்ள செம்பரம்பாக்கம், பூண்டி உள்ளிட்ட நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. படிப்படியாக உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

மொத்தம் 47 ஏரிகளில் இருந்து உபரி நீர் திறக்கப்பட்டுள்ளதால் அடையாறு ஆற்றில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. இதையொட்டி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கரையோரப் பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், வரதராஜபுரம், முடிச்சூர், பெருங்களத்தூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களை தாம்பரம் மாநகராட்சி நிர்வாகம் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்கின்றனர்.

தமிழ்நாடு அரசு
**பேரூராட்சிகள் துறை - தேனி மாவட்டம், பூதிப்புரம் பேரூராட்சி**
**ந.க.எண். 190/ 2024 / நாள்: 11.12.2024**

தேனி மாவட்டம் பூதிப்புரம் பேரூராட்சியில் 15th Finance Health Grants 2024-2025 இன் கீழ் பூதிப்புரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வெளிநோயாளிகள் பிரிவு கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணி மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. (இரண்டு உறை முறை )

1) தேனி மாவட்டம் பூதிப்புரம் பேரூராட்சியில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2. பணியின் மதிப்பீடு ரூ.60.00 இலட்சம்

3. பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

4. பொதுவான நேரம் மற்றும் நாள்.

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்த நமூனா இறக்கம் செய்தல் | 13.12.2024 காலை 10.00 மணி முதல் 26.12.2024 மாலை 3.00 மணி வரை |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 26.12.2024 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 26.12.2024 மாலை 3.30 மணி |

ஒப்பந்தபுள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர்.
பூதிப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.

செ.ம.தொ.இ / 5482 / ஒப்பந்தப்புள்ளி / 2024

### மேலூர் நகராட்சிக்குட்பட்ட நாளங்காடி, அம்மன் நகரில்

# ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை பணிக்கு பெரியபுள்ளான் எம்.எல்.ஏ. பூமி பூஜை செய்து வைத்தார்



**மேலூர், டிச. 14-**

மேலூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 23-ல் நாளங்காடி தெரு, அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் மேலூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் (2024- 2025) கீழ் ரூபாய் 8 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியை மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம், முன்னாள் எம்.எல்.ஏ கா. தமிழரசன் ஆகியோர் பூமி பூஜை செய்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மேலூர் யூனியன் சேர்மன் பொன்னுச்சாமி, 23வது அதிமுக நகர் மன்ற உறுப்பினர் டி. திவாகர், மேலூர் நகராட்சி ஆணையாளர் பாரத், பொறியாளர் முத்துக்குமார், ஓவர்சியர் உலகநாதன், 17 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் எஸ்.வி.பி செல்வம், அதிமுக நகர கழக பொருளாளர் கந்தசாமி, நகர் அவைத் தலைவர் பூச்செண்டு, தலைமை கழக பேச்சாளர் இ. மலைச்சாமி, வட்டக் கழகச் செயலாளர்கள் விரய்யா, மெடிக்கல் சரவணன், பாபு, வி.எம்.எஸ். அறிவழகன், சுப்பிரமணி, காமாட்சி, சாதிக், டொரிப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், மற்றும் ரெகுநாதன், கார்த்தி, பாலாஜி, மனோஜ், நாகராஜ், தினேஷ், தர்மராஜ், சசிகுமார் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில்

# வி.எல்.எஸ்.ஐ. மற்றும் தகவல் செயலாக்கம் தலைப்பில் சர்வதேச மாநாடு நடைபெற்றது

### அமெரிக்கா, பின்லாந்து தொழில் வல்லுநர்கள் சிறப்புரை




**விருதுநகர், டிச. 14-**

கலசலிங்கம் பல்கலைக் கழகத்தில் வி.எல்.எஸ்.ஐ. மற்றும் தகவல் செயலாக்கம் தலைப்பில் சர்வதேச மாநாடு நடைபெற்றது. இதில் அமெரிக்கா, பின்லாந்து தொழில் வல்லுநர்கள் சிறப்புரையாற்றினர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலையில், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் துறை, டிஎஸ்டி எஸ்இஆர்பி , புது டில்லி நிதியுதவி மற்றும் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் செமி கண்டக்டர் அசோசியேஷன் (ஐஇஎஸ்ஏ), புது டில்லி, ஆதரவுடன், ''விஎல்எஸ்ஐ மற்றும் தகவல் செயலாக்கத்தில் நிலையான பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள்'' என்ற தலைப்பில் இரண்டு நாள் சர்வதேச மாநாடு -2024 வேந்தர் முனைவர் கே. ஸ்ரீதரன், தலைமையில் நடைபெற்றது.

துணைத் தலைவர் முனைவர் எஸ்.சசி ஆனந்த், துணைவேந்தர் எஸ்.நாராயணன், பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி டீன் டாக்டர் சிவக்குமார் வரவேற்பு பேசினார். துறை ஆராய்ச்சி செயல்பாடுகள் குறித்து, துறைத் தலைவர் முத்துக்குமார் விளக்கினார்.டாக்டர். ஷஷி கார்த் தர்கர், இரண்டு நாள் மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றி விவரித்தார், மேலும் அவர் மாநாட்டில் மொத்தம் 250 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும் என்று கூறினார் மற்றும் தொழிற்சாலை ஸ்பான்சர்கள், மேத்ஒர்க்ஸ், பி2எப் எஸ்இம்ஜ , ஐசி வடிவமைப்பு, பெர்மியோனிக் மற்றும் எல்ஐஎன் - எஸ்இம்ஜ ஆகியவற்றைக் குறிப்பிட்டார்.

ஆராய்ச்சி துறை இயக்குநர் முனைவர் பள்ளி கொண்ட ராஜசேகரன், தலைமை விருந்தினர்,டெசால்வ் , செமி கண்டக்டர் அசோசியேஷன் தலைவர் முனைவர் வி.வீரப்பன் மற்றும் டாக்டர். நிஷு குப்தா, பின்லாந்தின் விஐடி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானி, சேத்தன். அரவிந்த் பாட்டீல், அரிசோனா, அமெரிக்கா, டாக்டர் விஷால் ஷர்மா, ஸ்டாஃப் இன்ஜினியர், மைக்ரோன் டெக்னாலஜி, ஹைதராபாத், ரஞ்சித் குமார், இயக்குனர், பிஆர்எஸ் செமிகான், சென்னை, பி.ஆர். சிவக்குமார், நிறுவனர் , மேவன் சிலிக்கான், பிரதீப் சிமலபதி, இயக்குனர், மார்க்யூ செமி கண்டக்டர். ஆகியோரை அறிமுகப்படுத்தினார்.

தலைமை விருந்தினர், முனைவர் வி.வீரப்பன், மாநாட்டை துவக்கி வைத்து, செமி கான் ப்யூசன் குறித்து உரையாற்றினார். மேலும், மாணவர்கள் பெரிய கனவையும், பெரிய தொலைநோக்கு பார்வையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தி, மாநாட்டு ஆய்வுக் கட்டுரை மலரையும் வெளியிட்டார்.

முனைவர் ஜே. பென்னிலோ ஃபெமாண்டஸ் நன்றியுரை வழங்கினார். ஸ்கூல் ஆஃப் எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரிக்கல், பயோமெடிக்கல் டெக்னாலஜி பேராசிரியர்கள் , டெக்னீஷியன்கள் அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

### ஒட்டன்சத்திரம் பாச்சலூர்

# சாலையில் சாய்ந்த மரத்தை நெடுஞ்சாலை துறை அகற்றினர்



**ஒட்டன்சத்திரம். டிச. 14-**

ஒட்டன்சத்திரம் பாச்சலூர் சாலையில் சாய்ந்த மரத்தினை நெடுஞ்சாலை துறையினர் அகற்றினர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பாச்சலூர் மலைச்சாலையில் நேற்று பெய்த கன மழையால் பாறைகள் , மரங்கள் சாய்ந்து பொதுமக்களின் பொது போக்குவரத்திற்கு மிகுந்த தடையாக இருந்தது.

இதனை அறிந்து உரிய நேரத்தில் ஒட்டன்சத்திரம் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் விஜயகுமார், உதவி பொறியாளர் இளவரசன்,சாலை ஆய்வாளர்

ஆண்டவன் உள்ளிட்ட நெடுஞ்சாலைத்துறை பணியாளர்கள் மலைச்சாலையில் விழுந்த இடர்பாடுகளை ஜே.சி.பி. வாகனம் மூலம் அகற்றி போக்குவரத்தை சரி செய்தனர்.



அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அமுதலிங்கேஸ்வரர் கோவிலில் திருக்கார்த்திகையை முன்னிட்டு முருகன் வள்ளி தெய்வானை உடன் சிறப்பு அலங்காரத்தில் பொதுமக்களுக்கு அருள் பாலித்த காட்சி.

# நத்தம் பகுதி சிவாலயங்களில் பிரதோஷ விழா



**நத்தம், டிச. 14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோவில்பட்டியில் உள்ள கைலாசநாதர் கோவிலில் கார்த்திகை மாத பிரதோஷ விழா நடந்தது.இதையொட்டி மூலவர் செண்பகவல்லி சமேத கைலாசநாதருக்கும் சிறப்பு பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது.பின்னர் அங்குள்ள நந்தி சிலைக்கு பால்,பழம்,பன்னீர், இளநீர்,மஞ்சள்,சந்தனம்,தீர்த்தம் உள்ளிட்ட 16வகையான அபிஷேகங்கள் நடந்தது. தொடர்ந்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நந்தி சிலைக்கு தீபாராதனைகள் நடந்தது.பின்னர் கோவிலின் உள்பிரகாரத்தை சுற்றி சுவாமி புறப்பாடு நடந்தது. இதில் சுற்று வட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர்.இதைப்போலவே நத்தம் அருகே குட்டூரில் உள்ள உண்ணாமலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலில் பிரதோஷ விழா நடந்தது.இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

### உரிமம், வரி செலுத்தாமல் இயக்கம்:

# 2 பஸ் உள்ளிட்ட 27 தனியார் வாகனங்களுக்கு அபராதம்

**வத்தலக்குண்டு, டிச. 14-**

உரிமம், வரி செலுத்தாமல், இயக்கிய 2 புதுச்சேரி பஸ்கள், 27 தனியார் வாகனங்கள் வர்த்தக நோக்கில் பயன்படுத்தியது கண்டறியப்பட்டது! ஒரு லட்சத்து 70 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல்மாவட்டம்கொடைக்கானலில் உரிய ஆவணங்களின்றி ஏராளமான வாகனங்கள்இயக்கப்பட்டுவருவதாகவும், சொந்த வாகனங் களை வாடகைக்கு பயன்படுத்துவதாகவும் புகார் எழுந்தது. இதுகுறித்து நடவடிக்கை எடுக்க, தமிழக மோட்டார் வாகன இணை ஆணையர் சத்தியநாராயணன் உத்தரவிட்டார். அதன்பேரில், திண்டுக்கல் மாவட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலர் கார்த்திகேயன் தலைமையில் வத்தலக்குண்டு வட்டார போக்குவரத்து ஆய்வாளர் ஜாஸ்மின், மதுரை பறக்கும் படை போக்குவரத்து ஆய்வாளர் அனிதா ஆகியோர்காலைமுதல்மாலைவரைகொட்டும்மழையில்கொடைக்கானல் பஸ்நிலைய பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர்.

புதுச்சேரியில்இருந்துகொடைக்கானலுக்கு சுற்றுலா பயணிகளை ஏற்றி வந்த 2 பஸ்களை மறித்து சோதனை செய்தனர். இதில் உரிய உரிமம் இன்றியும், வரி செலுத்தாமலும் பஸ்கள் இயக்கப்பட்டது தெரியவந்தது.இதையடுத்துஅதிகாரிகள் 2 பஸ்களையும் பறிமுதல் செய்த னர். அந்தபஸ்களில்வந்த சுற்றுலாபயணிகள்,வேறுபஸ்களில்அனுப்பிவைக்கப்பட்டனர். மேலும் உரிய ஆவணங்களின்றி இயக்கப்பட்ட மொத்தம் 29 வாகனங்களுக்கு ரூ.1 லட்சத்து 70 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் சொந்த வாகனங்களை வாடகைக்கு இயக்கினால் பறிமுதல் செய்யப்படும் என்று அதிகாரிகள் எச்சரித்தனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# முதுகுளத்தூர் அருகே கனமழையால் 50 ஏக்கர் மிளகாய் செடிகள் பாதிப்பு



**முதுகுளத்தூர், டிச. 14-**

முதுகுளத்தூர் அருகே கனமழையால் 50 ஏக்கர் மிளகாய் செடிகள் அழிந்துள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே உள்ள சாம்பக்குளம் கிராமத்தில் கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு பெய்த மழையினால் மிளகாய் செடியினை விவசாயிகள் நட்டனர். மேலும் விவசாயிகள் களை எடுத்து மிளகாய் செடிகளுக்கு உரம் வைத்து காய் காய்க்கும் பருவத்திற்கு வளர்த்து வந்தனர்.மிளகாய் செடிகள் வளர்ந்துள்ள நிலையி;ல் வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக மழை பெய்து வருகிறது. இதனால் மிளகாய் செடிகள் அழிந்துள்ளன.

முதுகுளத்தூர் தாலுகாவில் சாம்பக்குளம் கிராமத்தில் 50 ஏக்கர் மிளகாய் செடிகள் மழையினால் மூழ்கி அழிந்துள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் மிளகாய் செடிகள் அழிந்துள்ள பகுதிகளில் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதிவிவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மருத்துவமனை தீ விபத்தில் 6 பேர் பலி:

# முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் நேரில் ஆறுதல்



**திண்டுக்கல், டிச. 14-**

திண்டுக்கல்லில் தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 6 பேர் பலியாயினர். மேலும் 30 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். முன்னதாக முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் நேரில் சென்று அவர்களுக்கு ஆறுதல் அளித்தார்.

திண்டுக்கல் - திருச்சி ரோட்டில் எலும்பு முறிவு சிகிச்சை தனியார் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இங்கு நேற்று முன்தினம் இரவு முதல் தளத்தில் திடீரென தீ பிடித்தது. தீமளவென எரிய ஆரம்பித்தவுடன் நோயாளிகளும், செவிலியர்களும், நோயாளிகளின் உறவினர்களும் பதறி அடித்துக் கொண்டு மருத்துவமனையை விட்டு வெளியேறினர்.

நான்கு மாடி கட்டிடம் கொண்ட இம்மருத்துவமனையில் புகைமூட்டம் அதிகளவில் நான்கு மாடிகளையும் சூழ்ந்தது. பயத்துடன் லிப்ட்டில் சென்றவர்கள் திடீரென மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் லிப்ட் பாதியிலே நின்றதால் அதிலேயே சிக்கிக் கொண்டனர்.

தகவல் அறிந்தவுடன் திண்டுக்கல் தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து மருத்துவமனைக்கு வந்தனர். 30 பேர் கொண்ட குழு மூன்று பிரிவாக பிரிந்து வேக வேகமாக தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மேலும் தீ மேலும் பரவாமல் தடுப்பதற்கான அடுத்த அனைத்து கட்ட முயற்சிகளையும் மேற்கொண்டனர். தீயணைப்பு வீரர்களுடன் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் நோயாளிகளை மீட்கும் பணியில் தீவிரமாக செயல்பட்டனர்.

மருத்துவமனையில் இருந்தவர்களை மருத்துவமனைக்கு வெளியே கொண்டு வந்து தனியார் மருத்துவமனை மற்றும் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்கள் மூலம் தீக்காயம் பட்டவர்களை சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தனர். இவ்விபத்தில் ஐந்து வயது சிறுமி உட்பட ஆறு பேர் பரிதாபமாக உயிர் இழந்தனர்.

30க்கும் மேற்பட்டோர் தீக்காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தகவல் அறிந்தவுடன் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, சக்கரபாணி, முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார், மாவட்ட கலெக்டர் பூங்கொடி, மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.பி. பரமசிவம் ஆகியோர் நேரில் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபடுபவர்களுக்கு அறிவுறுத்தலை வழங்கினார்.

மேலும் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், தீக்காயம் அடைந்தவர்களுக்கும் ஆறுதலையும் தெரிவித்தனர்.

# அலங்காநல்லூர் தர்மசாஸ்தா ஆலயத்தில் முகூர்த்தக்கால் நடும் விழா



**அலங்காநல்லூர், டிச. 14-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் ஸ்ரீ தர்ம சாஸ்தா ஆலயத்தின் 52 ஆம் ஆண்டு உற்சவ விழா வருகிற மார்கழி மாதம் 1, 2,3, ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

இதை முன்னிட்டு ஆலயத்தின் முன்பு முகூர்த்த கால் நடும் நிகழ்ச்சி நடந்தது. இதில் ஏராளமான ஐயப்பன் முருக பக்தர்கள் கலந்து கொண்டனர்.டிசம்பர் 16ம் தேதி திங்கள் கிழமை திருப்பள்ளி எழுச்சியுடன் திரு விழா தொடங்குகிறது.

அன்று காலை சுவாமிக்கு 16 வகையான அபிஷேகமும், தீபாராதனைகளும் நடைபெறும்.17ம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் 1008 திருவிளக்கு பூஜை நடைபெற உள்ளது.

18ம் தேதி புதன்கிழமை அன்று காலை முதல் மாலை வரை மாபெரும் சிறப்பு அன்னதானமும் அன்று இரவு 7 மணியளவில் வான வேடிக்கை முழங்க ஸ்ரீ தர்ம சாஸ்தா அலங்கார மின் ஒளி சப்பரத்தில் நகர்வலம் வருதல் நடைபெறும்.

இந்த திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி ஏ. எல்.சீனிவாசன் மற்றும் ஐயப்ப முருக பக்தர்கள் விழா குழுவினர் செய்துள்ளனர்.

### வத்தலக்குண்டு

# ஈடன் கார்டன் அரிமா சங்கத்தின் சார்பில் மரக்கன்றுகள் நடவு விழா




**வத்தலகுண்டு, டிச. 14-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு ஈடன் கார்டன் அரிமா சங்கத்தின் சார்பில் திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து வத்தலக்குண்டிற்கு பிரியும் கன்னிமார் கோவில் சாலையில் சுமார் நூறு மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஈடன் கார்டன் லயன்ஸ் சங்க தலைவர் பாலமுருகன் தலைமை வகித்தார்.திட்டத் தலைவர் பாக்கியராஜ், திட்டதுணைத் தலைவர் செந்தில் குமார், திட்ட செயலாளர் ஜெர்மன் ராஜா, திட்ட பொருளாளர் ஜோஸ்வா ஆகியோர் முன்னிலை வகுத்தனர்,லயன்ஸ் சங்க மாவட்ட தலைவர் லயன் கென்னடி மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார். பேசும்போது வத்தலக்குண்டு பகுதியில் மிக அதிக அளவில் மரக்கன்றுகளை நட்டு பராமரித்து பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நிகழ்ச்சியில் லயன் சங்க நிர்வாகிகள் கஸ்தூரிராஜா, சௌந்தர்முரளி,ஆண்டவர், சக்திவேல், திருச்செல்வம்,சரவணன், ஜெயக்குரு,சங்கீதா, வர்ஷா,நித்தீஷ்,ஆசிக், உள்ளிட்டோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் முடிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் திட்ட தலைவர் பாக்கியராஜ் நன்றி கூறினார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலினிடம், ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, துணை முதல்வர், அமைச்சர்கள், சட்டப்பேரவை துணைத்தலைவர், அரசு தலைமைக்கொறடா, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரது ஒருமாத ஊதியமான 1 கோடியே 30 லட்சத்து 19 ஆயிரத்து 750 ரூபாய்க்கான வங்கி வரைவோலைகள், காசோலைகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினார். அருகில் தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன் உடனிருந்தார்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலினிடம், புதுடெல்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட 5 விருதுகளை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது கூடுதல் தலைமைச்செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன், பதிவாளர் ந.சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில், தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளிவாசல்கள் பணிகளை மேற்கொள்ள நிதியுதவியாக, 3 கோடியே 61 லட்சத்து 82 ஆயிரத்து 200 ரூபாய்க்கான காசோலைகளை தேவாலயங்கள் மற்றும் தர்காக்களின் நிர்வாகிகளிடம், முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அருகில் அமைச்சர் எஸ்.எம்.நாசர் உள்ளார்.

## வரும் 16-ம் தேதி முதல்... (1-ம் பக்க தொடர்ச்சி)

நேற்று முன்தினம் மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவிழந்தது. இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு - வட மேற்கு திசையில் குமரிக்கடல் வழியே மாலத்தீவு மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளை நோக்கி நகர்ந்து மேலும் வலுவிழக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்தில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகும் என்றும் இது அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவாகி தமிழக கடற்கரையை நோக்கி நகரும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக வருகிற 16-ம் தேதி முதல் மீண்டும் தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புதிய காற்றழுத்த தாழ்வு பகுதியும் தென் மாவட்டங்களுக்கே அதிக கனமழை கொடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆசிய பசிபிக் காதுகேளாதோர் போட்டி:

# 24 பதக்கங்களை வென்ற தமிழ்நாடு வீரர்களுக்கு துணை முதல்வர் வாழ்த்து

சென்னை, டிச. 14-

ஆசிய பசிபிக் காதுகேளாதோர் விளையாட்டு போட்டியில் 24 பதக்கங்கள் வென்றதற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறியிருப்பதாவது:- மலேசியாவில் நடைபெற்ற 10-வது ஆசிய பசிபிக் காதுகேளாதோர் விளையாட்டு போட்டி 2024-ல் தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனையர் வெவ்வேறு விளையாட்டுக்களில் 6 தங்கம், 13 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளனர்.

இப்போட்டியில், இந்தியா ஒட்டுமொத்தமாக 55 பதக்கங்களை வென்றுள்ள நிலையில், அதில் 24 பதக்கங்களை தமிழ்நாட்டு வீரர், வீராங்கனையர் குவித்திருப்பதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைந்தோம்.

பதக்கங்களை வென்ற தம்பிகள் மணிகண்டன், ராக்கப்பன், வினித், சாந்தனு, கார்த்திக், முகம்மது யாசின், சுதன் மற்றும் தங்கைகள் பிரியங்கா, சுபஸ்ரீ, சமீஹா பர்வீன், ஹரினி, ஜெர்லின் அனிகா ஆகியோருக்கு வாழ்த்துகள்.

இப்போட்டியில் பங்கேற்க உதவிடும் வகையில், நம் வீரர்களின் பயணம் உள்ளிட்ட செலவினங்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமும், - 'எலைட்' திட்டத்தின் வழியாக தங்கை ஜெர்லின் அனிகாவுக்கும் நிதியுதவி அளித்திருந்தோம். தற்போது பதக்கங்களோடு திரும்பியுள்ள நம் வீரர் - வீராங்கனையரின் திறமையைப் பாராட்டுகிறோம்.

நம் மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு என்றென்றும் துணை நிற்போம், அவர்களின் வெற்றிப்பயணம் தொடரட்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



● சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம் ஏரியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உபரிநீர் வெளியேற்றப்படுவதை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கூடுதல் தலைமைச்செயலாளர் க.மணிவாசன், மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



● திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு நேற்று மாலை மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.



● திருக்கார்த்திகையை முன்னிட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் லட்சதீபம் ஏற்றப்பட்ட காட்சி.

### ரேணுகாசாமி கொலை வழக்கு:

# நடிகர் தர்ஷனுக்கு கர்நாடக ஐகோர்ட் ஜாமீன்

பெங்களூரு, டிச. 14-

ரேணுகாசாமி கொலை வழக்கில் கன்னட நடிகர் தர்ஷன், நடிகை பவித்ரா கவுடா ஆகியோருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

கன்னட திரையுலகில் பிரபல நடிகராக இருந்து வருபவர் தர்ஷன். இவர், சித்ரதுர்காவை சேர்ந்த ரசிகரான ரேணுகாசாமியை கொலை செய்திருந்தார். இதுதொடர்பாக பெங்களூரு காமாட்சிபாளையா போலீசார் தர்ஷனை கைது செய்து பல்லாரி சிறையில் அடைத்தார்கள். சிறையில் முதுகு வலியால் அவதிப்பட்ட அவருக்கு, அறுவை சிகிச்சை செய்து கொள்ள கர்நாடக ஐகோர்ட் 6 வாரங்கள் இடைக்கால ஜாமீன் வழங்கியது.

இதையடுத்து, அவர் பெங்களூரு கெங்கேரி அருகே உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இதற்கிடையில், கர்நாடக ஐகோர்ட்டில் நிரந்தர ஜாமீன் கோரியும் தர்ஷன் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. அந்த மனு மீதான விசாரணையின்போது கடந்த 9-ந்தேதி தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் நீதிபதி ஒத்தி வைத்திருந்தார். அதே நேரத்தில் நேற்று முன்தினம் வரை தர்ஷனுக்கு அறுவை சிகிச்சை நடைபெறவில்லை.

இந்த நிலையில், நடிகர் தர்ஷனின் ஜாமீன் மனு மீதான தீர்ப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) மதியம் 2.30 மணியளவில் அறிவிக்கப்படும் என்று கர்நாடக ஐகோர்ட் தெரிவித்தது. அதன்படி இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு தற்போது வரை சிறையில் இருக்கும் நடிகர் தர்ஷன், நடிகை பவித்ரா கவுடா உள்பட 9 பேருக்கு ஜாமீன் வழங்கி கர்நாடக ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

# குரூப் 2,4 தேர்வு பாடத்தில் மாற்றம்: டி.என்.பி.எஸ்.சி. புதிய அறிவிப்பு

சென்னை, டிச. 14-

குரூப்2, குரூப் 4 தேர்வு பாடத்திட்டம் மாற்றப்பட்டு உள்ளதாக டி.என்.பி.எஸ்.சி., அறிவித்துள்ளது.

அரசு வேலையில் உட்கார்ந்துவிட வேண்டும் என்பது பலரின் கனவு. குறிப்பாக அதிக காலியிடங்கள் அறிவிக்கப்படும் தேர்வுகளில் லட்சக்கணக்கானோர் பங்கேற்கின்றனர்.

இந் நிலையில் குரூப் 2, குரூப் 4 தேர்வுகளுக்கான பாடத்திட்டத்தை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மாற்றி உள்ளது.இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டு உள்ளது. அதில் கூறப்பட்டு உள்ளதாவது; தேர்வர்களின் நலன் கருதியும், அரசுத்துறைகளின் தேவையைக் கருத்தில் கொண்டும், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 2 (தொகுதி 2 மற்றும் 2A பணிகள்)க்கான முதல்நிலைத் தேர்வின் பொதுத் தமிழ் மற்றும் பொது ஆங்கிலத்திற்கான பாடத்திட்டமும், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-4 (தொகுதி4 பணிகள்)-க்கான தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்விற்கான பாடத்திட்டமும் மாற்றி அமைக்கப்பட்டு https://tnpsc.gov.in/tamil/syllabus.html மற்றும் https://tnpsc.gov.in/English/syllabus.html என்ற தேர்வாணைய இணையதள பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# குற்றால அருவிகளில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு

## சுற்றுலா பயணிகளுக்கு தடை

தென்காசி, டிச. 14-

குற்றால அருவிகளில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் பாதுகாப்பு கருதி குற்றாலம் பகுதியில் நுழைய சுற்றுலா பயணிகளுக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக நெல்லை, தென்காசி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நேற்று பகலில் இருந்து தற்போது வரை விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் இடைவிடாது தொடர்ந்து மழை பெய்தது. நேற்று விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக தென்காசி மாவட்டத்தின் உள்ள பிரபல சுற்றுலா தலமான குற்றால அருவிகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.



இதனால் குற்றாலம் பகுதியில் உள்ள அருவிக்கரை ஓரமாக யாரும் செல்ல வேண்டாம் என காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. நேரம் செல்லச்செல்ல வெள்ளப்பெருக்கு மேலும் அதிகரித்தது.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப்பெருக்கால் அருவி பகுதிகளில் உள்ள கைப்பிடி உள்ளிட்டவை சேதமடைந்தன. மேலும், அருவிக்கு செல்லும் வழியில் அமைந்துள்ள கடைகள் மிகவும் பாதிப்படைந்துள்ளன.

சிற்றாற்றில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்கால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து குற்றாலம் செல்லும் சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு உள்ளது.

32 ஆண்டுகளுக்குப் பிறகு சிற்றாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு தென்காசி வாழ் மக்களை மிரள வைத்துள்ளது.

இதற்கிடையே, பாதுகாப்பு கருதி குற்றாலம் பகுதியில் நுழைய சுற்றுலா பயணிகளுக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டு உள்ளது. மேலும், சுற்றுலா பயணிகள் நுழைவதை தடுக்க, தடுப்புகள் அமைத்து போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தென்காசியின் பெய்த தொடர் கனமழையின் காரணமாக குண்டாறு அணை நிரம்பியதால், அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. 36.10 அடி உயரம் உள்ள குண்டாறு அணைக்கு வரும் 345 கனஅடி நீர் அப்படியே வெளியேற்றப்பட்டது.

அனைத்து நீர்த்தேக்கங்களுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்து வரும் நிலையில், நீர்நிலைகள் அருகே யாரும் செல்ல வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.